அகத்தியர் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
மன்மத ❂ மாசி (பிப்ரவரி – 2016) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 3
2. மகான் காகபுஜண்டர் ஆசி நூல் ........ 8
3. 08.11.1998 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை எது திருக்கல்யாணம்?** ........ 16
4. மாசி மாத பௌர்ணமி பூஜை ........ 39
5. பங்குனி மாத பௌர்ணமி பூஜை ........ 39
6. அன்பர்களின் அனுபவங்கள் ........ 40
7. ஆத்திசூடி – குருநாதர் அருளுரை தொடர் ........ 41
8. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 50
9. தினசரி வழிபாடு ........ 55
10. ஓங்காரக்குடிலுக்கு வழித்தடம் ........ 57
11. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 67

ஓங்காரக்குடில் ஆசான்

சிவராஜயோகி, பரமானந்த சதாசிவ சற்குரு

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளிடம்**

**ஆசிபெறும் நேரம்**

**தினசரி காலை 11 மணி மற்றும் மதியம் 3 மணி**

ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை, ஓங்காரக்குடில், துறையூர்.

கிட்டும் குறைவிலா ஞானபலம்
கிட்டும் இனி பிறவா சித்தி
கிட்டும் வாழ்வு நலம் வளம்
கிட்டும் பிறவிப்பயன் சூட்சுமம்

சூட்சும வல்லமை மிக்க ஞானி
சூட்சுமம் வல்லமை தாங்கிவரும்
மாட்சிமை மிக்க ஞானத்திருவடி நூலை
மண்ணுலகில் மக்கள் பெற்று வாசிக்க

வாசிக்க வைத்து இல்லில் பூஜிக்க
வையத்தார்கட்கு ஞானசித்தி
வாசிக்க மற்றவர்க்கும் வாங்கி அருள
வல்லமை பெருகி உலகோர் சிறப்பர்

– மகான் காகபுஜண்டர் அருளிய ஆசிநூல்.

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 40 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைக்கொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

அன்புடன் – இரா.மாதவன்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : 1598

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | கண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கணபதிதாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கதம்பமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கபிலர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கமலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கருவூர்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கல்லுளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கலைக்கோட்டு முனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கவுபாலச்சித்தர் | திருவடிகள் போற்றி | 30 |
| ஓம் | கணராமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காகபுஜண்டர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காசிபர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | காலாங்கிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குகைநமச்சிவாயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குதம்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குமரகுருபரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருதட்சணாமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குருராஜர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | குறும்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | 40 |
| ஓம் | கூர்மானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கொங்கணேஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கோரக்கர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌசிகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கௌதமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கமுனிச் சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கர மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சங்கிலிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சச்சிதானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சட்டநாதர் | திருவடிகள் போற்றி | 50 |
| ஓம் | சண்டிகேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சத்யானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவயோகமாமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவவாக்கியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சிவானந்தர் | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | விசுவாமித்திரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வியாக்ரமர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வியாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | விளையாட்டுச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வேதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | 131 |

ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்

திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

# மாசி மாத ஞானத்திருவடி நூலிற்கு மகான் காகபுஜண்டர் அருளிய ஆசிநூல்

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன் M.A., B.Ed.,
ஓம் ஸ்ரீ காகபுஜண்டர் ஸ்ரீ அகத்தியர் நாடிஜோதிட ஆசிரமம்,
டி.வி.எஸ் டோல்கேட், திருச்சி. செல் : 99655 71837

1. சிவமைந்தா பாலனே முருகனே
சிக்கலை தீர்த்திடும் சிங்காரனே
பவனி வந்து பாமர மக்களுக்கும்
பாலகனாய் அருளும் குகனே

2. குகனே குன்றக்குடி ஐயனே
குருவாகி நின்றருளும் நாதனே
மகனாய் புத்திர வரம் வேண்டுவார்க்கு
மகா சூட்சும வரமருளும் அப்பனே

3. அப்பனே சுவாமிநாதனான சுப்பனே
அடியவர் உள்ளத்துள் என்றும்
காப்பாக நிற்கும் கந்தனே
கனி வேலவனே கண்கண்ட தெய்வமே

4. தெய்வமே தெய்வானை வள்ளி எனும்
தெய்வ சக்திகள் ஞானத்துணைபட
அய்யம் தவிர்க்கும் மெய்ஞான சூட்சுமம்
அருளும் மாசிலா சண்முகநாதனே

5. நாதனே நாதத் தத்துவத்துள்ளும்
நான்மறையாய் நிற்கும் போதனே
வேதனே விண்ணவர் போற்றும்
வேலவனே வெற்றி நாயகனே

6. நாயகனே ஞானப் புதல்வனே
நமனை வெல்லும் முதல்வனே
தாயாக தயவாக உன்னை அழைக்க
தக்க துணையாய் அருளும் முருகனே

7. முருகனே முக்கண் புதல்வனே
மூலன் முதல் சகல ஞானிகளும்
ஆறுமுகனே என அழைத்திட
அஞ்சேல் என சர்வசித்தி அருளி காத்து

8. காத்து ஞானியர்கள் கூட்டம்
கலியுக காப்புக்கென வகுத்த
சித்தே சிவ சூட்சும முத்தே
சிந்தை வைக்க உன் நாம செபத்தை

9. செபத்தால் செகமே மாறுமப்பா
செப்பிடுவேன் ஆறுமுகன் உன் புகழ்
அபாயமற போற்றி வர மக்கள்
அழிவில்லா மீள்வர் என்று விளம்பி

10. விளம்பியே உன் மகா சக்தியாக
வினை போக்க ஞானலோகம் படைக்க
களம் கண்ட கலியுக ஞானி
கண்டுரைப்பேன் ஆறுமுக அரங்கமகா தேசிகனுக்கு

11. தேசிகனுக்கு ஆற்றலாய் வருகின்ற
தெய்வீக நூலாம் ஞானத்திருவடிக்கு
ஆசி தந்து மன்மத தேள் திங்கள்
(மன்மத வருடம் கார்த்திகை மாதம்)
அறிவிப்பேன் காகபுஜண்டர் யானும்

12. யானுரைக்க கலியுக காப்பாய்
உயர் சக்தி ஆக வந்த ஞானி
ஞானதேசிக ஆறுமுக அரங்கனே
ஞாலத்தை கடைத்தேற்ற வந்த

13. வந்த ஆறுமுக அருள் ஒளியின்
வடிவப்பா வாழும் ஞானியப்பா
இந்த கலியுகத்தில் ஆறுமுகனுக்கு
ஏழாம் படை வீடு தந்து காத்திட

14. காத்திட தன் அவதார சூட்சுமம்
கருணைப் பெருக்காய் இருக்க
உத்தமமாய் அறச்சாலை துவக்கி
உயர் சேவை ஆற்றும் அரங்கன்

15. அரங்கனே உலக மக்களுக்கு
ஆபத்தை நீக்கி காக்கும் குரு
வரங்களும் அரங்கன் வழி வர
வருகவே வாய்ப்பாய் கிட்டும்

16. கிட்டுமே கேட்ட பலன் எல்லாம்
குருவடியை தொழ அடைவர்
திட்டமுடன் மக்களை தேடி
தேசிகன் வருகின்ற காலமதில்

17. காலமதில் கலியுக மக்களே
கண்டுமே ஆசானை வணங்கி
கோலமதாய் ஆசி பெற நலம்
குவலயத்தில் தருமத்தில் உதவி

18. உதவி தீட்சை ஆசி பெற
உலகத்தில் சர்வ சித்திகளும்
பூதலத்தில் மக்கள் அடைவர்
புகலவே ஆசான் அருளிய

19. அருளிய அருட்கஞ்சி முறை
அப்பனே அனைத்து திக்கும்
அருள்பெற விரிவாய் இயங்க
அப்பனே கலி மாயை அகன்று

20. அகன்று அறபூமி ஆகுமப்பா
அருள் தேசமாக இனி உலகம்
வகைபட அரங்கன் தயவால்
வறுமையிலா வளம் பெறுவது உறுதி

21. உறுதிபட அரங்கன் சொல்லும்
உயர் கொள்கை உபதேசம்
வருமுலகில் மக்கள் வளமுற
வல்லமையான சக்தியாக மாறுமப்பா

22. அப்பனே ஆறுமுகனே அரங்கனே என
அழைப்பவர்கள் அச்சமில்லா
காப்பான பெருவாழ்வு பெறுவர்
கண்டமிடர் இல்லா ஆயுள் வளம் அடைவர்

23. அடைய இயலா பெரும் தடைகள்
அனைத்து வகை காரியங்களிலும்
தடை நீங்கும் அரங்கன் ஆசிபெற
தருமத்தில் உதவி வர வரம் காண்கும்

24. காண்கவே ஏழாம் படை வீட்டை
கஷ்டம் விலகும் மக்களுக்கு
ஆன்மீக ஞான அறிவு வளரும்
அருளோடு பொருள் வளம் தரும்

25. வளம் தரும் வள்ளல் ஞானி
வாழும் ஞானி அரங்கன் மூலம்
பலமுற எல்லா ஞானிகளுமே
பார்க்க சேவிக்க வரும் மக்களுக்கு

26. மக்களுக்கு அருளி நின்றிட
மண்ணுலகில் சித்தர் வழிபாட்டில்
ஆக்கமுடன் இருக்கும் மக்கள்
அனைவரும் வந்து வணங்க

27. வணங்க அவரவர் எண்ணிவரும்
வடிவில் ஞானிகள் உருவில்
இணங்கி அரங்கன் ஆசி கிட்டும்
எண்ணிய வண்ணம் சித்தி கிட்டும்

28. கிட்டும் குறைவிலா ஞானபலம்
கிட்டும் இனி பிறவா சித்தி
கிட்டும் வாழ்வு நலம் வளம்
கிட்டும் பிறவிப்பயன் சூட்சுமம்

29. சூட்சும வல்லமை மிக்க ஞானி
சூட்சுமம் வல்லமை தாங்கிவரும்
மாட்சிமை மிக்க ஞானத்திருவடி நூலை
மண்ணுலகில் மக்கள் பெற்று வாசிக்க

30. வாசிக்க வைத்து இல்லில் பூஜிக்க
வையத்தார்கட்கு ஞானசித்தி
வாசிக்க மற்றவர்க்கும் வாங்கி அருள
வல்லமை பெருகி உலகோர் சிறப்பர்

ஞானத்திருவடி நூலுக்கு ஆசிநூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

நூலின் சாரம் :

சிவனின் மைந்தனே, பாலனே, பாலமுருகனே! சிக்கல் தீர்த்து நலம் அருளுகின்ற சிங்காரவேலனே! உலகெலாம் ஒரு நொடியில் வலம் வந்து, அறியாமையில் மூழ்கியுள்ள பாமரருக்கும் பால ரூபமாய் வெளிப்பட்டு இரங்கி இதம் புரியும் குகனே! குன்றக்குடி அமர்ந்த அய்யனே! குருவாய் நின்றருள் புரிகின்ற தலைவனே! உம்மை நாடி வந்து புத்திரபாக்கியம் வேண்டுவோர்க்கு மகா சூட்சுமமாய் வரமருளும் அப்பனே! அப்பனுக்கு பாடம் சொல்லிக்கொடுத்த சிவகுருநாதனே சுவாமிநாதனே சுப்பனே! உம்மை நாடும் அடியவர் உள்ளத்து, என்றும் நீங்காது நின்றருள் புரிந்து அவர்களுக்கு காப்பாக நிற்கின்ற கந்தபெருமானே! பழனிமலை வேலனே! கண்கண்ட தெய்வமே! தெய்வீக சக்திகளாம் தெய்வானை வள்ளியெனும் தெய்வ சக்திகளின் துணையோடு உலகோர் தம்மின் அய்யங்களை போக்கி நல்லருள் புரிகின்றவனே மெய்ஞான

சூட்சுமம் அருளும் மாசிலா மணியே! சண்முகநாதனே! நாதனே! நாதத்தின் தத்துவத்துக்குள்ளும் நான்மறையாம் வேதங்களாய் நிற்கும் செம்பொருள் அறிவுச்சுடரே! வேதங்கள் போற்றும் வேதனே வேதநாயகனே! விண்ணவர் போற்றும் வேலவனே! வெற்றிகளையே தந்தருளும் வெற்றி நாயகனே! ஞானத்தின் புதல்வனே! ஞானபண்டிதனே! எமனை வென்ற முதல்வனே! எமனை வெல்லும் வல்லமையை அருளும் நாதனே! தாயாய் உம்மை அழைக்க, தயவாய் உம்மை அழைக்க, அழைத்தவர் தமக்கு தாயாய், சேயாய் தயவுடை தனிப்பெருங்கருணை தெய்வமாய், தன்னிகரில்லா தனிப்பெருந்தயவு ஜோதிச்சுடராய் தோன்றி, அழைத்தோர் தமக்கு அக்கணமே தோன்றி அஞ்சேல் என அபயகரம் நீட்டி அவர்தம்மை விட்டு அகலாது துணையாய் நிற்கின்ற பரஞ்ஜோதி சுடரே! முருகப்பெருமானே, முருகனே! முக்கண்ணனாம் சிவனின் புதல்வனே! திருமூலர் முதல் சகல ஞானிகளும், “ஆறுமுகப்பெருமானே” என்றே அன்போடு அழைத்திட, “அஞ்சேல்” என உடன் தோன்றி அழைத்தவர் தமக்கு சர்வசித்திகளையும் அருளி காத்து ரட்சிக்கின்ற நாயகனே ஞானியர் கூட்டத்தின் தலைவனே! ஞானியர் கூட்டமே கலியுகத்தின் காப்பாளர்கள் என்றே வகுத்திட்ட எங்கள் தலைவனே! இறைவனே! எண்ணிலா பெருமையுடைய எம்பெருமானே! தயாநிதியே! தன்னிகரில்லா தனிப்பெரும் தலைமை தெய்வமே! சித்தே! சித்த சொரூபமே! சிவ சூட்சும முத்தே! சிவானந்த தேனே! சிவசொரூபமே! மாசிலா மாமணியே! மண்ணுலகை காக்க வந்த மகாதேவனே! அய்யனே! ஆராஅமுதே! அளவிடற்கரிய ஆற்றல் கொண்ட அற்புதமே! பொற்பதமே! சிந்தையுள் சிவமைந்தா முருகா உமது நாமத்தை மனமுருகி சிந்தை வைத்தே உமது நாமஜெபமதை மனமுருகி சொல்ல சொல்ல உமது நாமஜெபத்தாலே இந்த உலகமே மாறுமப்பா.

அய்யனே! அப்பனே! முருகா! ஆறுமுகனே உனது புகழ்தனை சந்தேகமின்றி முழுமனதுடன் நம்பிக்கையோடு உமது பெருமை கூறி போற்றி வரவர, மக்கள் அழிவில்லாது. அழிவிலிருந்து மீள்வார்களப்பா என்றே காகபுஜண்டன் யானும் கூறியே உமது மகா சக்தி வடிவமாக இவ்வுலகின் வினை போக்க, கலியுகத்தின் மாமாயையிலிருந்து மக்களை மீட்டு காத்து ரட்சித்து ஞானலோகம் படைக்க அவதாரமாக வந்துதித்து இன்று இக்காலம், களம் கண்ட மகா ஞானயோகி வாழும் கலியுகஞானி ஆறுமுக அரங்கமகாதேசிகனுக்கு உரைக்கின்றேன் அண்ணல் அரங்கனின் ஆற்றலாய் வெளிவருகின்ற ஞானத்திருவடி நூலிற்கு ஆசி தந்து மன்மத வருடம் கார்த்திகை மாதம் இந்த ஆசி நூல் தனை அறிவிக்கின்றேன் காகபுஜண்டர் யானுமே எனக் கூறுகிறார் மகான் காகபுஜண்டர்.

கலியுகத்தை காக்க, கலியுக காப்பாளனாய் உயர் சக்திகளை அளவிலாது கைக்கொண்டு மகா சக்தி வடிவமாக வந்துதித்திட்ட அவதார ஞானி ஞானதேசிக ஆறுமுக அரங்கமகாதேசிகனே இவ்வுலகை கடைத்தேற்ற வந்திட்ட மகா ஞானியாவார். ஆறுமுக அரங்கனே அருள் ஒளியின் ஞானவடிவமப்பா. இக்கலியுகத்தின் வாழும் ஞானியப்பா.

இக்கலியுகத்தின் ஆறுபடை வீடுகளுக்கு மேலாய் ஏழாம் படை வீடாய் துறையூர் ஓங்காரக்குடிலதனை அமைத்து இவ்வுலகை காத்திடவே தன் அவதார சூட்சுமத்தினை எளிமையாக்கி கருணையே வடிவினனாகி தயவே வடிவாகி நிற்க, உத்தமமாய் அறச்சாலைதனை துவக்கி உலகெங்கும் உயர் தொண்டுகளை ஆற்றி உலகின் புண்ணியபலத்தையே உயர்த்தி காட்டுகின்ற உத்தம மகாஞானி அரங்கனேயாவார்.

ஆறுமுக அரங்கமகாதேசிகனே உலகத்தின் ஆபத்தை நீக்கி, உலக மக்களுக்கு உண்டாகவிருக்கும் ஆபத்தையும் நீக்கி காக்கும் வல்லமைமிக்க சற்குருநாதனாவார்.

எல்லையில்லா வரங்களெல்லாம் அரங்கன் வழிதனிலே இவ்வுலகிற்கு வருவதினால் அரங்கன் வழி வருவோர்க்கு வரங்கள் பெறும் வாய்ப்பும் கிட்டுமப்பா. அரங்கனை பின் தொடர தொடர, தொடர்கின்றோர் கேட்ட வரமெலாம் கிடைத்து, கேட்ட பலன்களெல்லாம் குரு அரங்கனை வணங்க வணங்க கிடைக்கப் பெறுவார்களப்பா.

கலியுகம் மாற்றி ஞானயுகம் அமைத்திடவே மிக உறுதி பூண்டு மாபெரும் திட்டங்களுடன் உலக மக்களை ஞானயுகம் அமைக்க அழைத்திடும் வண்ணமாக அளவிலாத உறுதியும், ஆற்றலும் கொண்டு மக்களைத் தேடியே அரங்கன் உலகை வலம் வருகின்ற காலமாகும் இந்த அற்புதமான பொற்காலம்.

கலியுக மக்களே அரங்கனே உங்களை நாடி, மிக எளிமை கோலம் பூண்டு உலகமாற்றம் நிகழ்த்த, உங்களுக்கு வாய்ப்புகளை தந்திட, நேரில் உங்களை நோக்கி வருகின்றபடியினாலே அரங்கன் உங்கள் பகுதிக்கு வருகின்ற தருணமதனிலே ஆசான் ஆறுமுக அரங்கனை பயபக்தி விசுவாசத்துடன் கண்டு வணங்கி தொழுது பணிந்து அற்புதமாய் பணிவுடன் ஆசி பெறுவது அனைவருக்கும் நன்மையே பயக்குமப்பா.

அரங்கன் உங்களை நாடிவரும் காலம் தன்னிலே, அரங்க தரிசனம் பெற்று அரங்கன் ஆற்றும் அளவிலாத தானதருமப் பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகள் செய்து அரங்கனிடத்து தீட்சை உபதேசமடைய, உபதேசமடைந்தோர் சர்வசித்திகளையும் பெறுவார்களப்பா.

உலகமாற்றம் கருதியே அற்புதமான தருமசேவையாக, மக்களை புண்ணியவான்களாக ஆக்கிடவே உலக புண்ணிய பலத்தினை பெருக்கிடவே

எளிமைபட அருளிய அருட்கஞ்சி முறையினை மக்களே அனைத்து திசைகளிலும் மக்கள் எடுத்து செய்து, விரிவாய் செய்திட செய்திட அப்பனே கலியின் மாயை இவ்வுலகை விட்டு அகன்று உலகின் பாவசுமை குறைந்து இவ்வுலகமே அறபூமியாய் ஆகிடுமப்பா.

புண்ணியம் பெருகிட அரங்கனின் அருள் கருணையால், பெருந்தயவால், பேராற்றலால், தவசக்தியால் முறையாக முன்னேறி இவ்வுலகமே அரங்கனருளால் வறுமையிலாத உலகாய் மாறி வளம்பல பெற்று வளமான பூமியாக மாறுவது உறுதியப்பா.

சற்றும் குறையற்ற வகையிலே உறுதிபட அரங்கமகாதேசிகன் கூறும் அருள் உபதேசங்கள், உயர் ஞான கொள்கைகள் தம்மை உலக மக்கள் கடைப்பிடித்திட வருங்காலங்களிலே அரங்கனின் உபதேசமதனாலே இவ்வுலகம் வளம் பெற்று வல்லமையான சக்தியாக மாறுமப்பா.

அப்பனே! ஆறுமுகனே! ஆறுமுக அரங்கனே! என மனமுருகி அழைத்திட்டால், அழைப்பவர்கள் அச்சமில்லாத வாழ்வை பாதுகாப்பான வாழ்வை, இறையருள் மிக்க வாழ்வை பெறுவர், கண்டங்கள் அற்ற வாழ்வையும், நீடிய ஆயுளையும் பெற்று சிறப்படைவர்.

அடைவதற்கு இயலாத பெரும் தடைகளும், அனைத்து வகையான காரியத்தடைகளும் அரங்கனது ஆசியை பெற்றிட்டால், தடைகள் நீங்கிடும், தருமத்தில் உதவி வரவர, செயல்கள் வெற்றிகரமாக நல்விதமாய் நிறைவேறுமப்பா. தருமத்தில் உதவஉதவ அரங்கனிடத்து வரங்களையும் பெறுவார்கள்.

உத்தம மகா ஞானாலயம், ஆறுமுக அரங்கனின் வாழ்விடம் முருகப்பெருமானின் அவதாரமாகி இப்பூவுலகை வழி நடத்துகின்ற தலைமை ஞானபீடம், ஏழாம் படை வீடு ஓங்காரக்குடிலதனை கண்டாலே, கண்டவர்கள் கஷ்டமெல்லாம் விலகிடுமப்பா. கண்டவர் தமக்கு ஆன்மீக நாட்டமும் ஆன்மீக ஞான அறிவும் வளர்ந்திடுமப்பா. அருளும், பொருளும் நிறைந்து வளமான வாழ்வை வாழ்வார்களப்பா.

வளங்களை வரங்களாய் வாரித்தரும் வள்ளல் ஞானி, கலியுகத்தின் வாழும் ஞானி, ஆறுமுக அரங்கமகாதேசிகர் மூலம் உலகின் எல்லா ஞானிகளும் வெளிப்பட்டு அரங்கனை பார்க்க, வணங்க, வணங்கி ஆசிபெற, தொண்டு செய்ய வருகின்ற மக்களுக்கு அருளாசிகளை அற்புதமாய் வழங்கி நின்று காத்தருள்வதினாலே உத்தம மகா ஞானி, மனித குலம் தழைக்க அருளிய சித்தர்கள் ஞானவழிபாட்டை ஆக்கமும் ஊக்கமும் கொண்டு பயபக்தியுடன் செய்து குடிலதனை நாடி வந்து அனைவரும் அரங்கமகாதேசிகனை வணங்கி ஆசிகளை பெற வேண்டும்.

அரங்கமகாதேசிகனை முருகனாய் உணர்ந்து வணங்க வணங்க, வணங்கினோர் எண்ணிய வண்ணமே அவர் விரும்பிய ஞானியர் வடிவினிலே அரங்கன் தோன்றி ஆசிதனை அருள்வார். அவரவர் எண்ணிய எண்ணமும் சித்தியாகும்.

உத்தம மகா ஞானயோகி உலகாளப் பிறந்த ஞானபண்டித அவதாரம், கலியுக காப்பாளன், கருணாமூர்த்தி ஆறுமுக அரங்கமகாதேசிகர் தம்மை வணங்கிட வணங்கிட, வணங்குவோர் தமக்கு குறைவில்லாத ஞானபலம் கிட்டுமப்பா. இனி பிறவா நிலையும் சித்தியாகும், வாழ்வு நலமும் வளமும் மிகுந்து வளமான வாழ்வையும் பெற்று, தாம் பிறந்த பிறவியின் நோக்கம் உணர்ந்து பிறவிப்பயன் சூட்சுமம் அறிந்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளலாம்.

சூட்சுமத்தில் அளவிலாத வல்லமைமிக்க மகா ஞானி அரங்கமகாதேசிகர்.

சூட்சுமத்தில் அளவிலாத வல்லமைகளை கொண்டு, தோற்றத்தில் எளிமை மிக கொண்டிட்ட, அரங்கமகாதேசிகனாரின் சூட்சுமமான வல்லமைகளை தாங்கி வெளிவரும் அளவிலா பெருமையுடைய மாட்சிமை மிக்க ஞானத்திருவடி நூலினை மக்களெல்லாம் பயபக்தியுடன் பணிந்து பெற்று, பயபக்தியுடன் வாசிக்க வாசிக்க, வீட்டில் வைத்து பூஜிக்க பூஜிக்க ஞானத்திருவடி பெற்ற இல்லத்தார்க்கு ஞானசித்தியும் உண்டாகும். தாம் பெற்று படிப்பதோடு நில்லாமல், பிறர் படித்து அவரவரும் ஜென்மத்தைக் கடைத்தேற்றிட உதவும், தயவு உடையோர்க்கு வல்லமைகள் பெருகி, பெரும் சிறப்பை அடைவார்கள் என தமது ஞானத்திருவடி ஆசி நூல் மூலம் கூறுகிறார் மகான் காகபுஜண்டர்.

–சுபம்–

கந்தனே என்றே கனிவுடன் போற்றிட
வந்தேனே என்பான் வானவர் போற்றிட.

ஆலவாய் அண்ணலின் அருந்தவப் புதல்வனே
ஞாலத்தை ஆள்வான் நன்மக்கள் போற்றவே.

இடைபின் கலைநடுவே இயங்கும் குகனை
தடையற போற்றிட தானவனாமே.

மருதூரில் அவதரித்த மாமன்னர் வள்ளலார்
அருளாட்சி புரிந்திடுவர் அகிலம் செழிக்க.

திருவிளக்கு பூஜை உங்கள் பகுதியில் செய்ய தொடர்புக்கு
**R.சுரேஷ்** – 94434 21935

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**எது திருக்கல்யாணம்?**

என்ற தலைப்பில் 08.11.1998 அன்று அருளிய

# அருளுரை

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க உறுப்பினர்களே வணக்கம்.

நாம் தினந்தோறும் ஆன்மீகத்தைப் பற்றி பேசி வருகிறோம். மற்றவர்கள் ஆன்மீகம் பேசுவதற்கும், நாம் ஆன்மீகம் பேசுவதற்கும் வேறுபாடு உண்டு.

கோவிலில் தெய்வங்களுக்கு பாலாபிஷேகம், தேனாபிஷேகம் செய்யப்படுகிறது. கோவில்களில் தெய்வங்களுக்கு கல்யாணம் செய்து வைப்பார்கள். இதை நித்திய கல்யாணம் என்றும் சொல்வார்கள்.

நாமும் கல்யாணம் செய்கிறோம். அது எப்படி? இடகலையாகிய பெண் கலையையும், பின்கலையாகிய ஆண் கலையையும் புருவ மத்தியில் செலுத்துகிறோம். பின்கலையையும் ஆண் கலையையும் சேர்த்து வைத்தால் திருமணம்.

ஆக, இடகலையையும், பின்கலையையும் சேர்க்கக் கற்றுக் கொண்டவர்கள் சூரியனையும், சந்திரனையும் சேர்க்கக் கற்றுக் கொண்டவர்கள் ஆவார்கள்.

சூரியனையும், சந்திரனையும் சேர்த்தால் அமாவாசை என்று பொருள்படும். ஆண் கலையை சூரியன் என்றும், பெண் கலையை சந்திரன் என்றும் சொல்வார்கள். இதை எல்லோரும் செய்ய முடியாது.

இந்த உடம்பு கபத்தை உண்டு பண்ணும், நச்சுத்தன்மையாகிய சுக்கிலத்தை உண்டுபண்ணும். ஆணுக்கு சுக்கிலத்தையும், பெண்ணுக்கு சுரோணிதத்தையும் இந்த உடம்பு உண்டாக்கும்.

இந்த உடம்பு நமக்கு எதிரிதான். நமக்கு தொண்ணூற்றாறு தத்துவங்களும் எதிரிகளே. தத்துவக் குவியலும் எதிரிதான். ஆக இடகலையையும் பின்கலையையும் சேர்த்து வைத்தால் நமக்கு எதிரியாகிய உடம்பு நீங்கி விடும்.

நமக்கு எதிரியாகிய உடம்பு நீங்காமல், ஜென்மத்தைக் கடைத்தேற்ற முடியாது. முதலில் எல்லா மனிதர்களும் இதை புரிந்து கொள்ள வேண்டும். மிருகாதிகளுக்கு இது தெரியாது. மனிதன் தெரிந்து கொள்ள வேண்டியது கபம். மனிதனுக்கு கடைசி காலத்தில் மூச்சுக்காற்றைக் கபம்தான் கட்டும். சிலபேர் கபம் கட்டாமலேயே சாகிறான், இளமையில் சாகிறான். எப்படி இருந்தாலும், அந்த கபம் என்று சொல்லப்பட்ட ஒரு அழுத்தமுள்ள, ஒரு சக்தி, ஒரு பொருள் சுவாசக்குழாயில் அடைத்துக்கொள்ளும்.

யோகிகள் கபத்தை அறுக்கிறார்கள். அதை மட்டுமல்ல, நச்சுத்தன்மையாகிய அசுத்தங்களையும் நீக்கிவிடுவார்கள். அப்படி இல்லையென்று சொன்னால் அவன் இந்த இடத்திற்கு வர முடியாது. அவனுடைய நோக்கம் உடம்பை அறிந்து, உயிரை அறிந்து, உடம்புக்கும் உயிருக்கும் உள்ள கேடுகளை அறிந்து நீக்குவதுதான். அதில் முதலாவது கபம்.

உடம்பும் நமக்கு விரோதிதான். ஆனால் உடம்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தினம் சோறு சாப்பிடுகிறோம், தூங்குகிறோம், குளிக்கிறோம். இப்படியெல்லாம் செய்து உடம்பை காப்பாற்றிக் கொள்கிறோம். ஆனால் காப்பாற்ற வேண்டியது இந்த புற உடம்பு அல்ல.

இந்த புற உடம்பைக் காப்பாற்றிக் கொள்பவன் ஆன்மீகவாதியாக இருக்க முடியாது. காப்பாற்றப்பட வேண்டியது உள்ளுடம்பாகிய உயிருடம்பு. அது சூட்சம தேகம். நாம் காண்கின்ற உடம்பு தூல தேகம், காண முடியாத உடம்பு சூட்சும தேகம். சூட்சும தேகத்தை அறிவால்தான் உணர முடியும்.

சூட்சும உடம்பை அறிந்துகொள்ள வேண்டுமென்றால் வாசி வசப்பட வேண்டும். வாசியாகிய மூச்சுக்காற்று லயப்பட வேண்டும். மூச்சுக்காற்று லயப்பட்டால்தான், கபத்தையும் அறுக்கும், அவத்தையும் (அவம்) அறுக்கும். இதை புரிந்து கொண்டவன்தான் ஆன்மீகவாதியாக இருக்க முடியும். மகான் திருவள்ளுவப்பெருமான் மிகப்பெரிய யோகி.

**தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை**
**அஃதிலார் மேற்கொள் வது.**

**– திருக்குறள் – தவம் – குறள் எண் 262.**

தவத்திற்கென்று ஒரு அறிவு இருக்கிறது. மற்றவர்களால் இதை புரிந்து கொள்ள முடியாது. அது என்ன அறிவு**?** அந்த அறிவு யாரால் கிடைக்கும்**?** எந்த அறிவு கொண்டு தவம் செய்வது**?** தவத்தின் நோக்கமே அவத்தை அறுப்பதுதான். அவம் என்கிற வினையை நீக்குவது.

உடம்பு தோன்றும்போது அவமும் சேர்ந்துதான் தோன்றுகிறது. அவம் என்றால் வீண். வீணான உடம்பும் சேர்ந்துதான் தோன்றுகிறது. இல்லையென்றால் உயிர் வளராது. ஆக தவமும் தவமுடையார்க்கு ஆகும். அவன்தான் அறிவுள்ளவன். இந்த ஏட்டு அறிவு பயன்படாது. ஏட்டு அறிவின்

துணை கொண்டு அவத்தினை அறுக்க முடியாது. அவம் என்ற வினையை நீக்க முடியாது. இதற்கு எந்த அறிவு வேண்டும்? அவத்தை நீக்கியவர்களுடைய அறிவு வேண்டும். மகான் திருவள்ளுவர், ஆசான் அகத்தீசர் இவர்களுடைய ஆசியை பெற வேண்டும். எல்லா ஞானிகளும் அவத்தை நீக்கியவர்கள். ஆகவே எல்லா ஞானிகளும் ஒன்று. அவம் ஆகிய வீணான உடம்பை நீக்கியவர்கள்.

மகான் திருவள்ளுவப்பெருமான் அந்த உண்மையை அறிந்தார். ஏனென்றால் பெரியவர்களுடைய ஆசியில்லாமல், அவம் என்ற வீணான உடம்பை நீக்க முடியாது என்று அறிவதே சிறப்பறிவு. இதை ஆசான் திருவள்ளுவப்பெருமான் சொல்லுவார்.

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 2.**

கற்றதன் பயன் வாலறிவன் நற்றாள் என்றார். அவர்களுடைய திருவடிகள், நல்ல திருவடிகள் என்றார். வேறெந்த திருவடியும் நல்ல திருவடியாக இருக்க முடியாது.

வாய்மை – தூய்மை. ஆக தூய்மையான அறிவை உடையவனுடைய திருவடிகள்தான் நல்ல திருவடி. அந்த நல்ல திருவடி எமனை வெல்லும் வல்லமை உள்ளது, கபத்தையும் வெல்லும், அவத்தையும் வெல்லும். ஆக பெரியோர்களை அறிமுகப்படுத்தியிருக்கிறார். ஆசான் ஞானபண்டிதர் போன்ற ஞானிகள்தான் பெரியோர்கள். இதை ஆசான் அருணகிரிநாதர் சொல்வார்,

**கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே**
**வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினை நோய்**
**ஊழிற் பெருவலி யுன்னவொட் டாதுங்க ளத்தமெல்லாம்**
**ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.**

**– கந்தர் அலங்காரம் – கவி எண் 20**

ஆக, பெரியவர்களை அறிமுகப்படுத்தினார். தான் அறிந்து கொண்டதனால்தான், ஆசான் ஞானபண்டிதரை பூஜை செய், ஆசான் அகத்தீசரை பூஜை செய் என்றார்கள். அவம் நீங்குவதற்காக ஆசான் அகத்தீசரை பூஜை செய்ய வேண்டும். இந்த உடம்பில் சொர்க்கமும், நரகமும் சேர்ந்தே இருக்கிறது. அவம் நீங்குவதற்கு தொடர்ந்து ஆசான் அகத்தீசரை பூஜிக்க வேண்டும்.

இந்த உடம்பில் நரகமும் சொர்க்கமும் சேர்ந்தே இருக்கிறது என்பதை அறிகின்றவன்தான் அறிவாளி. அவன்தான் ஆன்மீகவாதி. நரகத்தையும் சொர்க்கத்தையும் அறிந்து கொண்டு, நரகத்தை நீக்கி சொர்க்கத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் வல்லமை உள்ளவன் எவனோ, அவன்தான் ஆன்மீகவாதி. இதை அறிந்து பேசுகின்றவர்தான் ஆன்மீகவாதி.

மற்றவர்கள்போல் அலங்காரப்பேச்சு பேசவும், பசப்பு வார்த்தை பேசவும் நாங்கள் இங்கே வரவில்லை. நாங்கள் அதுபோன்று பேசவும் மாட்டோம். எங்கள் வர்க்கமே அப்படி பேசாது. எங்கள் வர்க்கமல்ல, நமது வர்க்கமே அதை பேசாது.

ஆன்மாவைப் பற்றித் தெரியுமா? என்று அவனிடம் கேட்டால் அவனுக்கு தெரியாது. ஆன்மாவைப் பற்றி அறிந்தவன்தான் ஆன்மீகவாதி. ஆன்மாவைப் பற்றியிருக்கக் கூடிய நச்சுத்தன்மையை நீக்க வேண்டும். அந்த நச்சுத்தன்மையைத்தான் வீண், அவம் என்பார்கள். திருவடித்துணை இல்லாமல் நச்சுத்தன்மை நீங்காது. நச்சுத்தன்மையை நீக்க கற்றுக் கொண்டவன்தான் ஆன்மீகவாதி.

நாங்கள்தான் இதற்கு பாதை காட்ட வேண்டும். நாம் காட்டுகின்ற பாதை எமனை வெல்லும் வல்லமை உள்ளது, அது எவனையும் வெல்லும் வல்லமை உள்ளது. அவர்கள் எதுவும் செய்வார்கள். ஆக திருவருள் உண்டு. அதற்காக அகந்தையாக இருக்க மாட்டார்கள், எதையும் செய்வார்கள். இப்படி பேசுவது அகந்தை அல்ல. அவர்கள் பண்புள்ள மக்கள். ஆக திருவடி துணையைக் கொண்டு, தலைவனை எல்லா ஆன்மீகவாதிகளுக்கும் அறிமுகப்படுத்துவார்கள்.

ஆசான் அருணகிரிநாதர், மகான் திருவள்ளுவப்பெருமான், மகான் கொங்கணமகரிஷி தலைவன் திருவடியை அறிமுகப்படுத்துகிறார்கள். ஆக பெரியோர்களை வணங்குங்கள். ஆசி பெறுங்கள்.

**அகத்திய மாரிஷி நமா என்றென்றோது**
**அஷ்ட சித்துதனை ஈவார் குளிகை ஈவார்**
**அகத்தியரே காஷாய வேட மீவார்**
**அப்போது சித்தரெல்லாம் கைக் கொள்வார்கள்**
**அகத்தியரைத் தெண்டனிட்டு மேரு செல்ல**
**யாருக்குந் தடையில்லை அரசே யென்பார்**
**அகத்தியர் தாம் எக்கியத்தில் பிறந்த யோகி**
**ஆயிரத்தெட்டு அண்டமெல்லாம் ஆணையாச்சே.**

**– மகான் கொங்கணர் – கடைக்காண்டம் – கவி எண் 76.**

பொருள் திரட்டுவதற்கா? பொய்யான இல்லறத்திற்கா? தலைவனுடைய ஆசியைப் பெற வேண்டும். இதற்காக இல்லை. ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டும் என்பதற்காக தலைவனுடைய ஆசியைப் பெற வேண்டும்.

அசுத்தமாகிய தேகத்தை அறிந்து, அதை நீக்கி அதை வெல்வதுதான் ஜென்மத்தைக் கடைத்தேற்றுவது என்றான். ஆன்மாவைப் பற்றி அறிவது உண்மையான ஆன்மீகம்.

**தவமும் தவமுடையார்க்கு –** புரிந்து கொண்டு பூஜை செய்ய வேண்டும். ஞானிகளிடத்து பக்தி செலுத்துகின்றார்கள். தலைவனிடத்து அன்பு

செலுத்துகின்றார்கள். ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டும் என்பதற்காக ஆசான் அகத்தீசர் மீது அன்பு செலுத்த வேண்டும். நீர் அடைந்த உண்மையை அடியேன் அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆசான் அகத்தீசரிடம் கேட்க வேண்டும். தான் அறிந்த உண்மை எது என்று ஆசான் உணர்த்துவார். ஆசான் உணர்த்தினாலன்றி உணர முடியாது. அவம் நீங்க வேண்டும், தவம் சித்திக்க வேண்டுமென்று தினமும் ஆசான் அகத்தீசரை பூஜை செய்கிறான். அவம், தவம் என்பது என்னவென்று அறிந்து கொள்ள ஆசான் அகத்தீசரை கேட்டால், அவர்கள் உணர்த்துவார்கள்.

**தவமும் தவமுடையார்க்கு ஆகும் அவம்அதனை**
**அஃதிலார் மேற்கொள் வது.**

**– திருக்குறள் – தவம் – குறள் எண் 262.**

தக்க ஆசானுடைய வழிகாட்டுதல் இருக்க வேண்டும், இல்லையென்றால் பொங்கல், புளியோதரை வைத்து சாமி கும்பிட்டு சாப்பிட்டுப் போவான். கடவுளுக்கு திருமணம் செய்து வைப்பதல்ல நமது நோக்கம்.

நாம் திருமணம் செய்கிறோம். இடகலையாகிய பெண் கலையையும், பின்கலையாகிய ஆண் கலையையும் சேர்த்து புருவமத்தியில் செலுத்தி வைக்கிறோம். அதுதான் உண்மையான திருமணம். ஆக இப்படி சேர்த்துக் கொண்டவன்தான், அமாவாசையை அறிந்தவன். அன்றிலிருந்து அவனுக்கு வளர்பிறை என்று சொல்வார்கள். வளர்பிறை அது, தேய்பிறை அல்ல.

இதைப்பற்றி புரிந்து கொண்டு பேச வேண்டும். எல்லோருக்கும் புரியுமா என்று கேட்டால், புரியாது என்பது எங்களுக்கும் தெரியும். எப்போது புரியும்? எந்த அளவிற்கு ஞானிகளிடம் நெருங்குகிறாயோ, எந்த அளவிற்கு உருகுகிறாயோ, அந்த அளவிற்கு உணர்த்தப்படும். வீண்பொழுது போக்க முடியாது. வீண்பொழுது போக்குகிறவர்களுக்கு அவமாகப் போகும். தவத்தினை உடையவர் யார்? தவத்தைப் பெறுகின்றவன் எப்படி இருக்க வேண்டுமென்று கேட்டான். ஒவ்வொரு நாளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும், நாட்களை வீணாக்கக் கூடாது.

வீண்பொழுது போக்கக் கூடாது என்பது ஒரே நாளில் வருமா என்றால் வராது. அதுவும் எங்களுக்குத் தெரியும்.

எப்படி ஒரு தலைவி, தலைவன் மீது அன்பு செலுத்துகிறாளோ, அதுபோல தொடர்ந்து ஞானிகள் மீது அன்பு கொண்டு, இவன் உருக வேண்டும். இது எப்போது வரும்? தொடர்ந்து தினம் பூஜை செய்தால்தான் வரும். ஆசான் அகத்தீசர் நாமத்தை சொல்ல வேண்டும். ஆசான் அகத்தீசர் நாமத்தை சொல்லி சொல்லி, தெளிவடைய வேண்டும். ஆசான் அகத்தீசர் நாமத்தை தினசரி சொல்லி வந்தால்தான் அந்த உண்மை புலப்படும், தெளிவு வரும். ஆக இதுதான் உண்மை.

தலைவனைப் பற்றி அறிந்தவர்கள், உயிரையும், உடம்பையும் சேர்க்க கற்றுக் கொண்டவர்கள். அப்படி உடம்பையும் உயிரையும் சேர்க்க கற்றுக்கொண்டவர்கள்தான் உண்மைப்பொருளை அறிவார்கள். உண்மைப்பொருளை அறிந்தவன்தான் உடம்பையும் உயிரையும் சேர்ப்பான்.

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு?**

**– திருக்குறள் – நிலையாமை – குறள் எண் 340.**

இப்பொழுது உடம்புக்கும் உயிருக்கும் தொடர்பில்லை. ஆகவே புகுந்து கொள்ள இடமில்லையோ? என்றார் ஆசான் திருவள்ளுவர்.

**குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே**
**உடம்பொடு உயிரிடை நட்பு.**

**– திருக்குறள் – நிலையாமை – குறள் எண் 338.**

உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள நட்பு, முட்டைக்கும் குஞ்சுக்கும், அந்த ஓட்டிற்கும், குஞ்சுக்கும் உள்ள தொடர்பு போன்றது என்றார். அவர்கள் சேர்த்துக் கொண்டார்கள். இப்படி சேர்த்துக் கொண்டவர்கள் ஞானிகளிடத்து பக்தி செலுத்து என்று சொல்கிறார்கள். ஆக நாம் இதையெல்லாம் ஒவ்வொரு நாளும் பேச வேண்டும். தொடர்ந்து இப்படி பேசும்போது தெளிவு வரும். அன்பர்கள் ஞானிகள் அருளிய நூல்களை எடுத்து தினம் படிக்க வேண்டும்.

**பூசித்தல் வாசித்தல் போற்றல் செபித்திடல்**
**ஆசற்ற நற்றவம் வாய்மை அழுக்கின்மை**
**நேசித்திட் டன்னமும் நீசுத்தி செய்தன்மற்**
**றாசற்ற சற்புத் திரமார்க்க மாகுமே.**

**– திருமந்திரம் – சற்புத்திர மார்க்கம் – கவி எண் 1496.**

தினம் திருமந்திரம், திருஅருட்பா, திருக்குறள் படிக்க வேண்டும். ஞானிகள் அருளிய நூல்களை படிக்கும்போதுதான் பெரியவர்களை தொடுகிறார்கள் என்று அர்த்தம். பெரியோர்கள் ஆசி இருந்தால் உடம்பையும் உயிரையும் சேர்க்கலாம்.

திருமந்திரம், திருக்குறள் போன்ற ஞானநூல்களை படித்துத் தெளிவடைய வேண்டும். ஞானிகள் நூல்களை படிக்க வேண்டும். அப்படி படித்தால்தான் தெளிவு வரும்.

திருக்குறள் முற்றுப்பெற்ற முனிவர் ஆசான் திருவள்ளுவர் எழுதியது. திருப்புகழ் எழுதியவர் மிகப்பெரிய ஆசான் அருணகிரிநாதர், திருமந்திரம் எழுதியவர் மிகப்பெரிய ஆசான் திருமூலதேவர். இவர்களுடைய திருவடியை வணங்கி, ஞானநூல்களை எடுத்துப் படிக்க வேண்டும். சும்மா படித்தால் புரியாது. அது என்ன அவ்வளவு லகுவாக இருக்கிறதா என்ன?

**அண்ணல் அருளால் அருளுந்திவ் யாகமம்**
**விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரி**
**தெண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்**
**எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே.**

**– திருமந்திரம் – ஆகமச்சிறப்பு – கவி எண் 60.**

**அண்ணல் அருளால் அருளுந்திவ் யாகமம் –** தலைவன், தான் அறிந்த உண்மையை, அமுது போன்று படைத்து வைத்திருக்கிறான்.

**விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது –** கல்வி, அறிவு, திறமைகள், செல்வம் இருந்த போதும் சரி, எல்லா அறிவும் இருக்கும் மேலான மக்களும் இதை அறியமாட்டார்கள்.

**விண்ணில் அமரர் –** அப்படியென்றால் அமரர்கள் என்பவர்கள் ஆகாயத்தில் இல்லை. அவர்கள் மேலான மக்கள், புண்ணியம் செய்த மக்கள். இவர்களுக்கு எல்லா வகையிலும் கல்வி, அறிவு, கேள்வி, திறமை, வியூகம், பண்புகள் அத்தனையும் இருக்கும், எல்லா செல்வமும் இருக்கும், உடல் ஆரோக்கியம் இருக்கும், உடம்பைப் பற்றி அறிந்து கொள்வான்.

**தெண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்**
**எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே.**

அது எல்லாம் நீர் மேல் எழுத்து என்பார். அது போன்று இருக்கக் கூடிய நூலை, புரிந்து கொண்டு நீ படிக்க வேண்டும். நூலை படிப்பதற்கு தக்க ஆசான் துணை இருக்க வேண்டும்.

இந்த உலகத்தில் உண்மை ஆசானை நாட முடியுமா? தேவையில்லை. உண்மையான ஆசானை இனம் கண்டு பிடிக்க முடியவில்லை. இனம் கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு லகு அல்ல.

**மாத்தானவத்தையும் மாயாபுரியின் மயக்கத்தையும்**
**நீத்தார் தமக்கொரு நிட்டையுண்டோ? நித்தன் அன்புகொண்டு**
**வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று**
**பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர்பற் றற்றவரே.**

**– மகான் பட்டினத்தார் பாடல் – பொது – கவி எண் 19.**

ஏனய்யா உலக ஆசானை நாடிக்கொண்டிருக்கிறாய்? தேவையில்லை. ஆசானாக யாரை அறிமுகப்படுத்த வேண்டும்? இதைத்தான் நாம் சுட்டிக்காட்டுகின்றோமே! எங்கு பார்த்தாலும் “ஓம் அகத்தீசாய நம! ஓம் அகத்தீசாய நம! ஓம் அகத்தீசாய நம!” உலகமெல்லாம் போற்றும் தலைவன், உத்தமன், ஆசான் அகத்தீசர் நாமத்தை சொல்லியிருக்கிறோம்.

ஞானிகள் ஆசியில்லாமல் நூலறிவு நமக்கு வராது. இதை புரிந்து கொள்ள வேண்டும். பக்தி செலுத்தினால் பரம்பொருளை அறியலாம். ஞானிகளுடைய திருவடியே துணை! அதை நற்றாள் என்று சொல்வார்.

இந்த ரகசியம் திருக்குறள் படிப்பவனுக்குத் தெரியும். திருக்குறளை எழுதியவர் முதுபெரும் ஞானி என்றும், அவர் மரணத்தை வென்றவர் என்றும், எதையும் செய்யும் வல்லமை உள்ளவர் என்றும் எண்ணுகின்ற அறிவு வேண்டும்.

**நற்றாள் –** என் திருவடியே நற்றாள் என்று அவன் உணர்வான் என்பார். ஆசான் திருவள்ளுவருக்கு இது தெரியும். எனவேதான் அவர் சொல்கிறார்,

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 2.**

திருக்குறளைப் பற்றி புரிந்து கொண்டவன், நிச்சயமாக என்னுடைய திருவடியைப் பற்றியே ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வான் என்று சொல்வார்.

**நற்றாள் –** நல்ல திருவடி. நற்றாள் என்பது எங்கேயோ இல்லை. அவருடைய ஆசி, அவருடைய திருவடியே நற்றாள் என்பான்.

ஆக திருக்குறளைப் படிப்பவர்கள் அறிந்துகொள்ள வேண்டியது, இது கடவுளால் செய்யப்பட்டது. கடவுளால் செய்யப்பட்ட திருக்குறளைத் தொடும்போதே, ஆசான் திருவடியை தொடுவதாக நினைக்க வேண்டும்.

**நற்றாள் –** நன்மை தரக்கூடிய தாள், எமனை வெல்லும் தாள், அவத்தையும், கபத்தையும் அறுக்கும் தாள், ஆசான் திருவள்ளுவருடைய திருத்தாள்.

ஆக திருவடித் துணை இருந்தால் புரிந்து கொள்ள முடியாத ஒன்றை புரிந்து கொள்ளலாம்.

நமது சங்கம், சுத்த ஆன்மீகத்தைப் பற்றி பேசுகின்ற சங்கம். சுத்த ஆன்மீகம் என்பது, தோன்றும்போது அசுத்தமாகத் தோன்றியதை, முடிவில் சுத்தமாக்குவதாகும்.

இந்த சங்கம் ஆன்மாவைப் பற்றியிருக்கக் கூடிய, அசுத்தத்தை அறிகின்ற சங்கம். நாம் முற்றுப்பெற்ற ஞானிகளை, தலைவனை அறிமுகப்படுத்துவோம். இதுதான் உண்மையானது என்று சொல்வோம்.

**ஐயனே போற்றி போற்றி அருள்பெற்ற தேவே போற்றி**
**மெய்யனே போற்றி போற்றி மெய்சுடர் அணிந்தாய் போற்றி**
**கையனே போற்றி போற்றி காசினி முனிவா போற்றி**
**உய்யனே எனையாட் கொண்ட உந்தியில் உதிக்குந்தேவே**
**உந்தியிலுதிக்குந்தேவே ஒருபொருள் உகந்தாய் போற்றி**
**சிந்தையில் நினைந்த போதே திருநட மிட்டாய் போற்றி**
**வந்தித்தேன் உந்தன் பாதம் வானமுந் திறந்தாய் போற்றி**
**அந்தித்தேன் குருவே ஐயா அடியினைப் போற்றி போற்றி.**

**– மகான் புலத்தியர் – கவி எண் 3.**

**சிந்தையில் நினைந்த போதே திருநட மிட்டாய் போற்றி** – சிந்திக்கும்போதே ஞானிகள் வந்து அருள் செய்வார்கள். நினைப்பதற்கு முன்பாக நிற்கும் அய்யன், சிந்தையில் நினைந்த போதே திருநடமிட்டாய் போற்றி என்றார். ஞானிகள் நினைப்பதற்கு முன்னே வந்து நிற்கக் கூடியவர்கள். இதுதான் உண்மை. ஞானிகள் கூடவே இருக்கிறார்கள். குடிலில் நாம் பேசும்போது, நிறுத்து என்று சொல்வார்கள். இதுதான் இந்த தன்மை. இதுதான் சுத்த ஆன்மீகம். ஏனப்பா என்றால், நான் இருக்கிறேன், என்ன விசயம் என்பார். இதை எப்படி மக்கள் அறிவது? அவர்களுடைய ஊழ்வினை காரணமாக அவர்களால் அறிய முடியாது. இதை ஆசான் அருணகிரிநாதர் சொல்வார்,

**கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே**
**வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினை நோய்**
**ஊழிற் பெருவலி யுன்னவொட் டாதுங்க ளத்தமெல்லாம்**
**ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.**

**– கந்தரலங்காரம் – கவி எண் 20.**

மக்களுடைய வினைப்பயன், பாவம் மிகுதியானதனாலே, அறியாமை மிகுந்திருக்கும். அறியாமை மிகுந்திருப்பதனாலே, அவநம்பிக்கை இருக்கிறது. அவநம்பிக்கை இருப்பதனால் திருவடியைத் தொடமுடியாது. உண்மைப்பொருளை அவர்களாலே உணர முடியாது. சராசரி மக்களுக்கு இது எப்படி புரியும்? இது அவ்வளவு லகுவாக இல்லை. சராசரி மக்கள் அவ்வளவு லகுவாக உள்ளே போக முடியாது என்பது எங்களுக்குத் தெரியும். சராசரி மக்கள் பூஜை செய்தால்தான் அந்த நிலைமையை அடைய முடியும். பூஜைக்கே மனம் லயப்படவில்லையே அய்யா. சராசரி மக்கள் பூஜை செய்கிறான். ஆனால் மனம் லயப்படவில்லை. இதற்கு என்ன செய்வது?

**உங்கள் வல்வினை நோய் ஊழிற் பெருவலி யுன்னவொட்டாது** என்கிறார் ஆசான் அருணகிரிநாதர். வல்வினை நோய் ஊழின் பெருவலி என்றார். முன் செய்த பாவங்கள் மிகுதியாக இருப்பதனால், சிந்திக்க விடாது. **உன்ன ஒட்டாது** என்றால் சிந்திக்க ஒட்டாது. ஆக சிந்திக்க முடியாது.

சராசரி மக்கள் இதுபோன்ற உண்மைப்பொருள் அறிந்த ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தை கேட்க வேண்டும். ஆனால் இங்கே வரமுடியுமா என்றால் அது முடியாது. நம்பிக்கை வருமா, வராது. அதுவும் எங்களுக்கு தெரியும்.

**ஊழிற் பெருவலி யுன்னவொட் டாதுங்க ளத்தமெல்லாம்**
**ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.**

உங்கள் அத்தமெல்லாம் என்று செல்வத்தைப்பற்றி சொல்வார். அத்தம் என்றால் செல்வம். செல்வம் பெருகியிருந்தால் இன்னும் பிரச்சனை.

செல்வமும், அதே சமயத்தில் உத்தியோகமும் நல்ல வாய்ப்பும் இருந்தால் போதும், சுத்தமாக அவனை மடக்கிவிடும். ஒரு பெரும் பதவி, பெரிய செல்வம், புகழ் வாய்ந்த வாழ்க்கை எப்படி கிடைத்தது என்று அவர்களுக்கு புரியவில்லை. அது நல்வினை காரணமாக வந்தது.

ஆக நாம் இப்போது பல இடங்களில் "ஓம் அகத்தீசாய நம! ஓம் அகத்தீசாய நம! ஓம் அகத்தீசாய நம" என்று எழுத சொல்லியிருக்கிறோம். இப்படி ஏனய்யா, எழுத வேண்டும்? சராசரி மக்களால் இதை அறிந்து கொள்ள முடியாது.

சராசரி மக்கள் அறிந்து பூஜை செய்து, தன் நிலையை உயர்த்திக் கொள்ள முடியவில்லை. துன்பம் வருவதற்கு முன்னே, சிந்திக்கவொட்ட மாட்டேன் என்கிறான்.

தலைவனை நேசிக்க மாட்டேன் என்கிறான். கடைசி நேரத்தில் புண்ணியம் முடிந்து, உத்தியோகம் பாழ்ப்பட்டு, செல்வமும் இழந்து, உடம்பும் பாதிக்கப்பட்டு, சர்வமும் இழந்த பிறகு, வருகிறான். இவன் சிரித்துக் கொண்டிருப்பான். "நல்ல வாய்ப்பு இருந்தபோதே ஏன் இழந்துவிட்டாய்? நீ நாளை வீணாக்கிவிட்டாய்" என்பார்கள்.

**வல்வினை நோய் ஊழிற் பெருவலி யுன்னவொட் டாதுங்க ளத்தமெல்லாம் –** வசதி வாய்ப்புள்ள காலத்திலே அவர்களால் அதைப் பிடிக்க முடியவில்லை. நலிந்து மெலிந்து அல்லற்பட்டு வந்து கேட்கும்போது, "நாம் ஒன்றும் செய்ய முடியாது" என்று தலைவன் சொல்வார்.

ஆக சராசரி மக்கள், ஓடி ஆடி திடமாக இருக்கும் காலத்தில், இளமையாக இருக்கும் காலத்தில் பக்தி செலுத்த வேண்டும். இளமை இருக்கும்போது யோகநெறியைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கிறார்கள்.

ஆரம்பத்தில் யோகம் செய்பவன், அழிந்தே போவான். பக்தி செலுத்தி, தினம் தியானம் செய்து ஆசான் நாமத்தை சொல்ல வேண்டும். ஆனால் அதுதான் முடியவில்லையே! எவ்வளவு நேரம் உட்கார்ந்து பூஜை செய்வது, ஐந்து நிமிடம் பூஜை செய்வதற்குள் மனதுக்குள் எத்தனை போராட்டம்? ஐந்து நிமிடம்தான் நாமத்தை சொல்லி பூஜை செய்வான். ஐந்து நிமிடம் சொல்வதற்குள் ஆட்டம் கண்டுவிடும்.

இரண்டு மூன்று வருடம், நாமத்தை சொல்லுவான். அப்படி சொல்வதற்குள்ளேயே பெரிய லாபத்தை எதிர்பார்ப்பான், வாசி வசப்படணும், ஞானியாக வேண்டுமென்பான். ஆகவே முன் செய்த பாவங்களால்தான், சராசரி மக்களால் இதனை நெருங்க முடியவில்லை. பல ஜென்ம வாசனை இருக்க வேண்டும். சான்றோருடைய தொடர்பு இருக்க வேண்டும். சான்றோர்களுடைய தொடர்பு இருந்தால்தான் சராசரி மக்கள் தலைவனுடைய திருவடியைப் பற்ற முடியும்.

ஆசான் திருமூலதேவர் ஆடுதுறையில் அடக்கமானார். அவர்கள் பல இடங்களில் இருப்பார்கள். அப்போது தொண்டர்கள், “ஐயா! நீரெல்லாம் ஒளி உடம்பு பெற்ற ஆசான், உமது தோற்றத்தைக் கண்டாலே, உம்மைப் பார்த்தாலே பாவம் தீரும். எத்தனையோ பஞ்சமாபாவிகள் உன் திருவடியை, உங்களை பார்க்கும்போதே, அருள் பெற்றிருக்கிறார்கள்” என்று ஆசானிடம் கூறினார்கள். இங்கு அருள் பெற்றிருக்கிறார்கள் என்றால், அறிவு பெற்றிருக்கிறார்கள் என்று அர்த்தம். இங்கே அறிவு, அருள், அன்பு என, ஆக உம்மைக் காணும்போதே அன்பர்கள் உண்மைப்பொருளை பெறுகிறார்கள்.

பெரும் ஆற்றல் பெற்ற நீர், எங்களை விட்டுப் பிரிந்தால் எங்கள் நிலைமை என்ன? என்று கேட்டார்கள். “உண்மைதான், எங்களால் நடமாட முடியாது. அமிழ்தபானம் உண்ணுவதால், கனத்த தேகம் நீங்கி, லேசாக, பறக்கக் கூடிய தேகமாகிவிட்டது. ஆகவே நாங்கள் கீழே நடந்தால், பாதங்கள் பூமியில் படாது, லகரியாகிறது உடம்பு. இயல்பாகவே, நாங்கள் அடங்கியாக வேண்டும். உங்களுக்காக ஆசான் சமாதியாகிவிட்டார் என்பதற்காக, உங்களுக்கு நம்பிக்கை வரவேண்டும் என்பதற்காக நான் இங்கே தங்குகிறேன்” என்றார் ஆசான் திருமூலர்.

“எங்களுக்கு வேறு கதியே இல்லையா, இப்பேர்ப்பட்ட ஆசான், தன்னலமற்ற ஆசான், மிக்க தயவுள்ள ஆசான், அறிவு பொருந்திய, அறிவில் சிறந்த ஆசான், அருள் பொருந்திய ஆசான், கேட்பதெல்லாம் தரக்கூடிய வல்லவர், நீர் இருந்து இந்த உலகத்திற்கு தொண்டு செய்யாமல், நீர் இப்படி மறைந்தால், நீர் எங்களை விட்டுப் பிரிந்தால், எங்கள் நிலைமை என்னாகும்” என்று அன்பர்கள் கேட்கிறார்கள்.

“அஞ்சேல் பிள்ளைகளே! நீங்கள் நினைத்தால் அப்போதே வருவேன்.” என்றார். அது கருணை! திருமந்திரத்தில் முக்கியமான ஒரு கவி இது.

**நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மைச்**
**சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானைத்**
**தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனுங்**
**கனத்த மனத்தடைந் தாலுயர்ந் தாரே.**

**– திருமந்திரம் – ஞானகுரு தரிசனம் – கவி எண் 2667.**

நீ எங்கே நினைத்தாலும், அந்த இடத்தில் நான் வருவேன் என்றார். அன்பர்கள் கேட்பதுபோல், சராசரி மக்கள் நினைத்தவுடன் ஆசான் வருவார். **நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மை** – நீ எந்த வினாடி நினைக்கின்றாயோ அந்த நேரத்தில், எந்த மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி, கல்வி அறிவே இல்லாதவனாக இருந்தாலும் சரி, ஆசானை நினைக்க வேண்டும். அப்படி நினைக்கும்போது நான் வருவேன் என்றார். இதை நாம் உங்களுக்கு சொல்லத்தான் வேண்டும். நாங்கள் இதற்குதான் வந்திருக்கிறோம்.

“ஓம் அகத்தீசாய நம! ஓம் நந்தீசாய நம! ஓம் திருமூல தேவாய நம! ஓம் கருவூர் தேவாய நம!” என்று எங்கு பார்த்தாலும் எழுத சொல்லியிருக்கிறோம். எங்கு பார்த்தாலும் ஆசான் நாமம் எழுதியிருக்கிறது. இதேபோன்று எல்லா இடத்திலும் எழுத வேண்டும். மேலும் ஆசான் திருமூலதேவர் “என்னை அழைத்தால் போதும்” என்கிறார்.

**என்னவே நீயழைக்க எனக்குமுன்னே**
**எதிரேறி முன்வருவாள் ஆத்தாள்வாலை**
**சொன்னபேர் அறிந்துநன்றாய் அழைத்துப்பாரு**
**சூட்சமிதை உனக்காகச் சொன்னோமப்பா**
**இன்னபேர் இன்னகுறி யெண்ணவேண்டாம்**
**ஏகமாய் அறிந்திருப்போம் அப்போநாமும்**
**முன்னமே அழைக்கையிலே மூமூவென்றால்**
**முத்திதரும் வாலைபதஞ் சித்தியாமே.**

**– திருமூலர் ஞானம் 84–ல் கவி எண் 82.**

என்னை அழைத்தால் எனக்கு முன்பாக தலைவன் வருவாரென்று அவரே சொல்கிறார்.

**என்னவே நீயழைக்க எனக்குமுன்னே, எதிரேறி முன்வருவாள் ஆத்தாள்வாலை** – இப்பொழுது அவள் நமக்கு நச்சுத்தன்மையை, துஷ்டத்தன்மையை கொடுத்துக் கொண்டிருக்கிறாள். துஷ்ட எண்ணத்தைக் கொடுக்கக் கூடிய அவள், நல்லது செய்ய வருவாள். ஆக அனைத்தும் எங்களுக்குத் தெரியும் என்பார்.

**நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மை** என்று இங்கே சொன்னார். அது யாராக இருந்தாலும் சரி. எந்த மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி, “ஓம் திருமூலதேவா” என்றால், அப்போதே ஆசான் வருவார். ஆனால் சொல்ல வைக்க வேண்டும். பத்தாயிரம் ஞானிகளின் திருஉருவப்படங்களை எங்கு பார்த்தாலும் ஒட்டியிருக்கிறோம், வெளிமாநிலத்திலெல்லாம் ஒட்டியிருக்கிறோம். ஆக எங்கு பார்த்தாலும், “ஓம் அகத்தீசாய நம! ஓம் நந்தீசாய நம” என்ற ஞானிகள் நாமம் இருக்கிறது.

“ஓம் அகத்தீசாய நம! ஓம் நந்தீசாய நம! ஓம் திருமூலதேவாய நம! ஓம் இராமலிங்க தேவாய நம! என்று இந்த நான்கு மகான்களின் நாமங்களையும் தினமும் நாமஜெபம் செய்தால், நினைத்ததெல்லாம் கைகூடும். இல்லறத்தான் நன்மை அடைகிறான். அவனுக்கு வறுமை இல்லாத வாழ்வு அமையும், அச்சம் இருக்காது. ஆசான் நாமத்தை சொன்னால், அச்சம் இல்லாத வாழ்க்கை அமையும். எந்த வாகனத்தில் சென்றாலும் ஒன்றும் ஆகாது. அவனை துஷ்ட மிருகங்களோ, துஷ்ட தேவதைகளோ துஷ்ட ஜந்துக்கள் எதுவும் அவனை அசைக்க முடியாது. பகையெல்லாம் தொகையாக வந்தாலும், தூக்கி எறிந்துவிட்டுப் போவான்.

ஆக இந்த நான்கு நாமத்தை சொல்கின்றவனுக்கு அச்சமில்லை, வறுமையில்லை, பகையில்லை என்றார். இந்த நான்கு மகான்கள் நாமத்தை மக்களை சொல்ல வைக்க போகிறோம்.

**நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மை** என்றார். ஏனய்யா ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் என்ற பெயர் வைத்துள்ளீர்கள் என்றான். வருங்காலம் ஞானசித்தர் காலம் என்பதால்தான் அப்படி வைத்துள்ளேன். ஆக எல்லாமே ஒன்றுதான். **இன்னபேர் இன்னகுறி யெண்ணவேண்டாம் ஏகமாய் அறிந்திருப்போம் அப்போநாமும்** என்று சொல்வார்.

சராசரி மக்களாக இருந்தாலும் சரி, அவன் கற்றவனாக இருந்தாலும் சரி, அரசனாக இருந்தாலும் சரி ஆசானை வணங்க வேண்டும்.

மகான் பட்டினத்தார் கோடீஸ்வரர். ஒன்பது கோடி பொன்னை அள்ளித் தந்தவர். ஒன்பது கோடி பவுன் அல்லது ஒன்பது கோடி ரூபாய் என்று வைத்துக்கொள்ளலாம்.

ஆக முன் செய்த நல்வினை காரணமாக, புண்ணியமும், தவமும் இருந்ததனாலே, செல்வத்தையும் தந்தார்கள், ஞானத்தையும் தந்தார்கள். இது எல்லோருக்கும் அமையாது. ஆனால் இங்கே புண்ணியம் செய்திருக்க வேண்டும். செல்வமும் பதவியும் எல்லா வாய்ப்பும் இருக்கும்போது பூஜை செய்கிறான் என்றால் அவன் புண்ணியம் செய்திருக்கிறான்.

கோடீஸ்வரனாக இருப்பவன், பூஜை அறையில் உட்கார்ந்துகொண்டு, நாமஜெபம் செய்வான். நீ எதற்காக பூஜை செய்கிறாய் என்று ஆசான் கேட்டார். அதற்கு அவன் செல்வம் பெருகவேண்டும் என்றான். சரி, இவன் உருப்படமாட்டான். இப்போதே நான்கு தலைமுறைக்கு தேவையான பொருள் இருக்கிறது. நான்கு தலைமுறைக்குத் தேவையான பொருள் இருந்தும், மீண்டும் கடவுளை செல்வம் வேண்டுமென்று கேட்பான். இவன் சுத்த மடையன் என்பார் ஆசான். இதை ஆசான் திருவள்ளுவப்பெருமான் சொல்வார்,

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை; மற்றுஅது**
**வேண்டாமை வேண்ட வரும்.**

**– திருக்குறள் – அவா அறுத்தல் – குறள் எண் 362.**

கோடீஸ்வரனாக இருப்பான், ஆனால் பூஜை செய்வான். மகான் பட்டினத்தாரிடம் ஒன்பது கோடி பொன் இருந்தது. இதெல்லாம் உலக நடைக்காக வைத்திருக்கிறேன் என்றார், உலகநடைக்காக செல்வத்தைத் தந்திருக்கிறாய். ஆகவே, இந்த செல்வத்தை நானும் பயன்படுத்துகிறேன், மேலும் ஏழை எளிய மக்களுக்காகவும் பயன்படுத்துகிறேன் என்று ஆசானிடம் சொன்னார்.

இது போன்ற அறிவு, கேட்காமல் நமக்கு வர வேண்டும். செல்வம் இருக்கிறது போதும் என்று எண்ண வேண்டும். ஆசான் கைவிடமாட்டான்,

ஆசான் கைவிடமாட்டான், செல்வத்தை விரும்பாதே. ஆனால் மீண்டும் மீண்டும் செல்வமே வேண்டுமென கேட்காதே என்று சொல்லித்தர வேண்டும். ஒருமணி நேரம், அரைமணி நேரம் பூஜை செய்துவிட்டு, மக்கள் நிலையில்லாத செல்வத்தை விரும்புகிறார்கள்.

ஆசான் திருமூலதேவர், **நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மை** என்றார். இவன் எதற்கு நினைக்கின்றான்? நினைக்கும்போதே அவருக்குத் தெரியும். காலையில் பூஜை செய்வது பற்றி நேற்றே அவருக்குப் புரியும். இந்த உலகத்தில் யார் யார் நம்மை நினைக்கிறான்? யார் யார் சுத்த பூஜை செய்கிறான்? சுத்த பூஜை செய்கின்றவன், திருவடியைப் பற்றுகின்றவன் என்பதெல்லாம் ஆசானுக்குத் தெரியும்.

ஆசான் திருமூலதேவரையோ, மகான் நந்தீசரையோ, ஆசான் அகத்தீசரையோ புரிந்து கொள்கின்றவன் சுத்த பூஜை செய்கின்றான். திருவடியைத் தவிர வேறு கதியில்லை என்று எண்ணுவதுதான் சுத்த பூஜை. “வேறு வழியே இல்லை, வேறு கதியே இல்லை, இவர்கள்தான் நம்மைக் காப்பாற்றுவார்கள், அறிவும் ஆற்றலும் தருவார்கள், அறியாமை நீங்கி தெளிந்த அறிவை தருவார்கள்” என்று உணர்ந்து திருவடியைப் பற்ற வேண்டும்.

ஆக, **நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மை** என்று ஆசான் திருமூலர் சொல்வார். எப்படி நினைக்க வேண்டும் என்பதுதான் முன் செய்த வினை. அதை புரிந்தவர் சொல்கிறார். **வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை** – எதற்காக நினைக்க வேண்டும்? இனி பிறவாதிருக்க வேண்டும். எந்த உடம்பைக் கொண்டு? இந்த உடம்பைக் கொண்டு பேசிக்கொண்டிருக்கலாம். இப்பொழுது நாம் தாங்கியிருக்கும் உடம்பு ஒரு உடம்பா? இது உடம்பல்ல. ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆனால் இந்த உடம்பில்லாமல் முடியுமா என்றால் அதுவும் முடியாது. இந்த உடம்பைத் தாங்கியா அங்கே போக முடியும்? இதை விட்டுவிட்டுதான் போக வேண்டும்.

ஆசான் அகத்தீசரை நினைக்க வேண்டும். ஆசான் அகத்தீசரை தினமும் பூஜை செய்கிறோம். அடியேன் மரணமில்லாப் பெருவாழ்வு பெற வேண்டும், அடியேன் மனமாயை அற்றிட வேண்டும், உன் திருவடியை தொடர்ந்து பற்றி பூஜை செய்து வெற்றி பெற வேண்டும். இதற்கு நீர்தான் எனக்கு அருள் செய்ய வேண்டும். இந்த அறிவையும் நீர்தான் தர வேண்டுமென்று கேட்க வேண்டும். இதுநாள் வரை, பல்வேறு ஜென்மங்களில் நான் பூஜை செய்திருக்கிறேன். ஆனால் உங்களிடம் நிலையில்லாத ஒன்றைதான் கேட்டிருக்கிறேனே தவிர, நிலையான ஒன்றை கேட்கவில்லை. அப்படி கேட்க யாரும் எனக்கு சொல்லியும் தரவில்லை. நிலையான ஒன்றை நினைக்க வேண்டும். இதைத்தவிர வேறு ஒன்றைப்பற்றி நினைப்பவர்களைப் பற்றி ஆசான் திருவள்ளுவர் சொல்வார்,

**பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்**
**மருளான்ஆம் மாணாப் பிறப்பு.**

**– திருக்குறள் – மெய் உணர்தல் – குறள் எண் 351.**

**பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும் –** நிலையில்லாத பொருளை நிலை என்று உணருகின்ற மக்கள், அறியாமை உள்ளவர்கள். அவர்களுக்கு **மாணாப் பிறப்பு** உண்டு என்பார். மாணாப்பிறப்பு என்றால் ஈனப்பிறப்பு. ஈனப்பிறப்பு என்பது துன்பமான பிறப்பு என்பான்.

ஆக செல்வம் இருக்கும்போதே நிலையானதை ஆசானிடம் கேட்டுக் கொள்ள வேண்டும். நிலையில்லாத ஒன்றை கேட்பது மடமை. திருவடியைப் பற்றுகின்ற நோக்கமே, இனி பிறவாதிருக்க வேண்டும். இதை சொல்லித்தர வேண்டும்.

அப்போ உலக நடையில் இருக்க வேண்டாமா? மனைவி மக்கள் இருக்கக் கூடாதா? இருக்கலாம் அதற்கு தடையில்லை. அவர்களெல்லாம் நமக்குத் துணையாக இருக்கின்றார்கள். மனைவி, மக்கள், சுற்றத்தார் எல்லாம் துணையாக இருப்பார்கள். அவர்கள் உன்னை பூஜை செய்யவிடாமல் கையை பிடித்துக் கொள்கிறார்களா? ஞானிகளெல்லாம் அப்படி இருந்தவர்கள்தான். அவர்களுக்குத் தெரியும் இந்த ரகசியம். கடல் நீச்சல் தெரிந்தவர்கள். அப்படியே போய்க்கொண்டே இருப்பார்கள். உலகமக்களோடு இருந்துகொண்டே இருப்பார்கள். ஆனால் தன்னைக் காப்பாற்றிக் கொள்வார்கள்.

தன்னைக் காப்பாற்றிக் கொள்ள கற்றுக் கொண்டவன் திருவடியைப் பற்றியதால், தன்னைக் காப்பாற்றிக்கொள்ள கற்றுக்கொண்டான். அந்த கல்வியை தலைவன் தர வேண்டும். உலகநடையில் இருந்தாலும், தான் விடுபட்டு இருக்க வேண்டும். பார்த்தால் உலகத்தவர் போல் இருக்க வேண்டும்.

புளியம்பழம் எப்படி இருக்கும்? புளியும் ஓடும் தனியாக இருக்கும். தாமரை இலை எப்படி இருக்கும்? தண்ணீரில் இருந்தாலும் தண்ணீர் ஒட்டாது. பிள்ளைபூச்சி எப்படி இருக்கும்? சேற்றிலேயே இருக்கும், ஆனால் உடம்பில் சேறு ஒட்டாது. ஆக ஒருவன் பூரணமாக சித்தி பெறும் வரையில் உலகத்தை விட்டு போகக் கூடாது. இந்த அறிவை ஆசான் தரவேண்டும்.

**காடே திரிந்தென்ன காற்றே புசித்தென்ன கந்தைசுற்றி**
**ஓடே எடுத்தென்ன உள்ளன்பிலாதவர் ஓங்குவிண்ணோர்**
**நாடே இடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்**
**வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்பம் மேவுவரே.**

**– மகான் பட்டினத்தார் – திருவிடைமருதூர் – கவி எண் 1.**

ஆக, அன்புள்ளவன் எங்கே வேண்டுமானாலும் இருப்பான். உலகநடையில் இருந்துகொண்டே வெற்றிபெற வேண்டும். இந்த அறிவை ஆசான் தர வேண்டும். இல்லையென்றால் கற்பனை செய்துகொண்டு மனைவி மக்களை விட்டு விட்டு, காட்டில் சுற்றிக் கொண்டிருப்பான்.

பகலில் கொல்லிமலை ஏறுவான். இரவு நேரத்தில் விஷஜந்து அவனைக் கொன்றுவிடும். இப்படி எத்தனையோ ஜென்மங்கள். சாவு நல்ல சாவுதான். இருந்தாலும் விபரம் தெரியவில்லை. யார் பேச்சை அவன் கேட்டான். அவன் இஷ்டத்திற்கு போய்க்கொண்டிருப்பான்.

"ஐயா எனக்கு ஒன்றும் தெரியாது. உன்னுடைய நாமத்தை சொல்கிறேன். அதனால் பெரும் பாக்கியம் பெற்றிருக்கிறேன். ஆனால், உன்னிடம் என்ன கேட்கவேண்டுமென்று தெரியவில்லை. யாரும் எனக்கு சொல்லித்தரவில்லை. உலகமக்கள் எனக்கு உணர்த்தவில்லை. ஆன்மீகவாதிகள் சொல்லவில்லை. அவன் வெறும் ஜால்ரா பேர்வழியாக இருந்துவிட்டுப் போய்விட்டான். உலக ஆன்மீகவாதிகள் சொல்லாததனால் நீரே எனக்கு அருள் செய்ய வேண்டும்" என்று ஞானிகளிடம் கேட்க வேண்டும். இப்படி வேண்டுகோள் வைக்க அவனுக்கு சொல்லித்தர வேண்டும்.

"ஓம் அகத்தீஸ்வரா! உன் நாமத்தை சொல்ல பெரும் பாக்கியத்தை நான் பெற்றிருக்கிறேன். ஆனால் உங்களிடம் என்ன கேட்க வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை." என்று ஆசானிடம் சொல்ல வேண்டும்.

"பிறவாதிருக்க வேண்டும். அதற்குள்ள அறிவும், பரிபக்குவமும் எனக்குத் தர வேண்டும். என்னை ரட்சிக்க வேண்டும்" என்று அவன் கேட்க வேண்டும். இதுபோன்று கேட்டால் சராசரி மக்களும் வந்து விடுவார்கள். இதுபோன்ற வேண்டுகோளை, தலைவன் திருவடியைப் பற்றி கேட்க வேண்டும். இது கேட்கக் கூடிய வேண்டுகோள். இப்படி கேட்டால் சராசரி மக்களும் முன்னேறலாம். **நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மை** என்றார். அதே பாடலில் உலகமக்கள் அத்தனை பேரும் முன்னேறலாம் என்று சொல்லியிருக்கிறார். யாராக இருந்தாலும் நாம் காட்டுகின்ற பாதையை பின்பற்றிச் சென்றால், உலகமக்கள் அத்தனை பேரும் சித்தி பெறலாம்.

நம் சங்கம் காட்டுகின்ற பாதை, தெளிவான பாதை. இது சுத்த ஆன்மீக சங்கம். சுத்த ஆன்மீகம் எது? அசுத்த தேகத்தைப் புரிந்து அசுத்தத்தை நீக்கி, வெற்றி கண்டவர்கள் நாமெல்லாம். நான் மட்டுமல்ல, எல்லா அன்பர்களும் அந்த நிலைக்கு வருவார்கள். நமது சங்கம் இதைத்தான் சொல்லும். எனவே நமது சங்கம் சுத்த ஆன்மீக சங்கம்.

ஆசானை தொடர்ந்து நாமஜெபம் செய்து, தினமும் தொடர்பு கொள்கிறார்கள். சலிக்காமல் தொடர்பு கொள்கின்ற மக்கள் நிச்சயமாக தன் உடம்பை சலித்து எடுத்துவிடுவார்கள். ஆகவே ஆசானை கேட்க வேண்டும். "ஓம் அகத்தீஸ்வரா! நான் முன் செய்த வினையின் காரணமாக எனக்கு எது நல்லது எது கெட்டது என்று தெரியவில்லை. அவைகளை உணர்ந்து கொள்ள நீரே அருள் செய்ய வேண்டும்" என்று ஆசானை கேட்க வேண்டும்.

ஆசான் அருணகிரிநாதர் சொன்னாரல்லவா!

**கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலயத்தே**
**வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினை நோய்**
**ஊழிற் பெருவலி யுன்னவொட் டாதுங்க ளத்தமெல்லாம்**
**ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.**

**– கந்தரலங்காரம் – கவி எண் 20.**

ஆசான் அருணகிரிநாதர், மகான் திருமூலதேவர், மகான் மாணிக்கவாசகர், மகான் பட்டினத்தார், மகான் தாயுமானவசுவாமிகள் போன்ற ஞானிகளின் திருவடிகளை அவனால் பற்ற முடியவில்லை. இதற்கு காரணம், முன் செய்த பாவம் என்று ஆசான் அருணகிரிநாதர் சொல்கிறார். ஞானிகளிடம் திருவடியை பற்ற வாய்ப்புத் தரவேண்டும் என்று கேட்க வேண்டும்.

அதே சமயத்தில் தக்க ஆசான் சொன்னாலும் கேட்கமாட்டான். நாங்கள் சுத்த ஆன்மீகவாதி, தெளிவான ஆன்மீகவாதி. நாங்கள் அவத்தை நீக்கி தவத்தை செய்தவர்கள். நாங்கள் சொல்வதை மாற்றவோ, மறுபரிசீலனை செய்யவோ கூடாது. எங்களை அப்படியே குருவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டவன் நிச்சயமாக சித்தி பெறுவான். காரணம் நாங்கள் தெளிந்து, உணர்ந்து முற்றுப் பெற்றவர்கள். இப்படி அகந்தையாக பேசுகிறோம் என்று நினைக்கக் கூடாது. முற்றுப் பெற்றவர்களாகிய நாங்கள் சொல்வதை மறுபரிசீலனை செய்யாமல், உடனே செய். இதுதான் வழி.

“மனப்போராட்டங்கள், கடன் சுமை, தொட்டது துலங்கவில்லை, பிரச்சனைகள் உள்ளது. இதற்கு நான் என்ன செய்வது? மேலும் பூஜை செய்ய மனம் லயப்படவில்லை என்றான். இதெல்லாம் எங்களுக்குத் தெரியும். இதற்காக தடுமாற்றம் வேண்டியதில்லை என்றார்.

கவலைப்படாதே! ஆசானை பிடித்துக் கரையேறிக்கொள்ளலாம். ஆசான்தான் உன்னை ரட்சிப்பான், கடன்சுமையை தீர்ப்பான், மனஅமைதியை தருவான், உடல்நோயை தகர்த்தெறிவான், நல்ல நட்பைத் தருவான், நோய்நொடியில்லாத மனைவியாக அமைவாள், அப்படியே நோய்நொடி இருந்தாலும் மாற்றிவிடுவார்கள், முரண்பட்ட பிள்ளைகள் பண்புள்ள பிள்ளைகளாக மாறுவார்கள், தொட்டது துலங்கும்.

“ஆக மனம் லயப்படாமைக்கும், மன அமைதி இல்லாமைக்கும் காரணம் எங்களுக்குத் தெரியும். வறுமையும், பிணியும், பிரச்சனையும், கடன் சுமையும், தடுமாற்றமும், வஞ்சனை, பித்தலாட்டங்கள், பேயாட்டங்கள் இப்படி ஏகப்பட்ட பிரச்சனை அவனுக்கு இருக்கிறது. அதனால் மனம் லயப்படவில்லை என்பது எங்களுக்குத் தெரியும். இத்தனைக்கும் இடையிலும் நீ ஆசான் நாமத்தைச் சொல்ல வேண்டும்” என்றார்.

இந்த குணக்கேடுகள் எல்லாம் ஆசான் நாமத்தை சொன்னால் வீழ்ச்சியடைந்துவிடும். ஆசான் நாமத்தைச் சொன்னால் பகை

பொடிப்பொடியாகும். ஆசான் நாமத்தைச் சொன்னால் பல்வேறு பிரச்சனைகளெல்லாம் பொடிபட்டுப் போகும்.

ஆகவே, நாங்கள் சொல்வதை மாற்றக் கூடாது. இது கட்டளை! உத்தரவு! குடிலாசான் சொன்னால் அது கட்டளை, உத்தரவு என்று நினைக்க வேண்டும். ஆக, மென்மையாகத்தான் பேசுவோம். இதுதான் மார்க்கம். இதை நாங்கள் அறிந்திருக்கிறோம். இதை ஆசான் திருவள்ளுவர் சொல்வார்,

**கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅர் எனின்.**

**– திருக்குறள் – கடவுள் வாழ்த்து – குறள் எண் 2.**

**அகத்திய மாரிஷி நமா என்றென்றோது**
**அஷ்ட சித்துதனை ஈவார் குளிகை ஈவார்**
**அகத்தியரே காஷாய வேட மீவார்**
**அப்போது சித்தரெல்லாம் கைக் கொள்வார்கள்**
**அகத்தியரைத் தெண்டனிட்டு மேரு செல்ல**
**யாருக்குந் தடையில்லை அரசே யென்பார்**
**அகத்தியர் தாம் எக்கியத்தில் பிறந்த யோகி**
**ஆயிரத்தெட்டு அண்டமெல்லாம் ஆணையாச்சே.**

**– மகான் கொங்கணர் – கடைக்காண்டம் – கவி எண் 76.**

இங்கே **நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மை** என்றார். ஆக பெரியோர்களைப்பற்றி சொல்லி, நாங்கள் உங்களுக்கு காட்டுகின்ற பாதை தெளிந்த பாதை. இந்த பாதையை பின்பற்றி வாருங்கள் என்பது கட்டளை. எப்படி பூஜை செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொடுப்போம். இப்படி ஆசான் நாமத்தை சொல் என்று சொல்வோம்.

ஆக நீங்கள் அத்தனைபேரும் அறியாமையிலிருந்து விடுபட வேண்டுமென்றால், இந்த முறையை கையாள வேண்டும், பூஜை செய்ய வேண்டும். மனது லயப்பட வேண்டும். மனம் லயப்படுகின்றவனுக்கு வாசி லயப்படும். வாசி லயப்பட்டவனுக்கு ஆன்மா லயப்படும். ஆன்மா லயப்பட்டவனுக்கு உடம்பு லயப்படும். உடம்பு லயப்பட்டவனுக்கு எமன் லயப்படுவான். எமன் இப்போது நமக்கு பகைவனாக இருக்கிறான். பகைவனானாலும் லயப்பட வேண்டும். அப்ப எமன் யார் என்று கேட்டால், உடம்புதான். உடம்பு லயப்பட்டால் எல்லாம் லயப்படும். ஆக இதுபோன்ற தத்துவத்தை புரிந்துகொள்ள வேண்டும்.

**நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மைச்**
**சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானை**

நாங்கள் சொல்வதும் அதுதான். ஆசானை நினைக்க வேண்டும். யாரை நினைத்தாலும் உடனே வருவார்கள். இதை “நிமிடத்தில் அண்டமெல்லாம் பாய்வோம் நாங்கள்” என்று சொல்வார்கள்.

நிமிடத்தில் உலகத்தை வலம் வருவோம் என்றார். எந்த தேகத்தைக் கொண்டு வருவார்கள்? சூட்சும தேகத்தை, ஒளி உடம்பைக் கொண்டு வருவார்கள். அவர்கள்தான் அப்படி வர முடியும். இங்கே இருப்பார்கள், அமெரிக்காவில் இருப்பார்கள், ரஷியாவில் இருப்பார்கள், இப்படி போய்க்கொண்டே இருப்பார்கள். ஆக சராசரி மக்கள் நினைக்க வேண்டும்.

**நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மைச்**
**சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானை**

தலைவனே அப்படி சொல்கிறார். என்னை நினைத்துப்பார் உடனே வருவேன். நினைப்பதற்கு முன்னே வந்து நிற்பேன். ஆனால் எதற்கு என்னை கூப்பிட வேண்டுமென்று உனக்குத் தெரியும். ஆசானே திருமூலதேவா என்று அழைப்பதன் நோக்கம், இனி நான் பிறவாதிருக்க வேண்டும். அதற்குரிய அறிவை நீர் எனக்கு தர வேண்டுமென்று நினைக்க வேண்டும். சராசரி மனிதன் போல் என்னை நினைத்தால், நான் என் செய்வேன்? என்பார்.

தொடர்ந்து கேட்டு கேட்டு செல்வத்தைப் பெற்றிருக்கிறாயே தவிர, என்னிடம் எதைக் கேட்க வேண்டும் என்று உனக்குத் தெரியவில்லை.

**நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மைச்**
**சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானை**

நான் சத்தியமிட்டு சொல்கிறேன். எல்லாம்வல்ல பரம்பொருள், ஜோதி வடிவாக உள்ள பரம்பொருள் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன். என்னை நினையுங்கள். என்னை மட்டுமல்ல யாரை நினைத்தாலும் சரி, நீ நினைப்பது யாராக இருந்தாலும் சரி, எல்லோரும் அருள் செய்வார்கள்.

**இன்னபேர் இன்னகுறி யெண்ணவேண்டாம்**
**ஏகமாய் அறிந்திருப்போம் அப்போநாமும்**

நீ அழைப்பது ஆசான் சட்டமுனியாக இருந்தாலும் சரி, அருள் செய்வார்கள். அவர் பெரிய 'மம்மா'. சட்டமுனி என்றால் பயில்வான். உனக்கு பிரச்சனை என்றால் என்னை கூப்பிட்டுப்பார் என்பார்.

**இன்னபேர் இன்னகுறி யெண்ணவேண்டாம்** என்பார். ஆகவே அவரை அழைக்க வேண்டும். ஆசான் திருமூலர், "ஜோதியின் ஆணை, தலைவன் மீது ஆணை, எல்லாம் வல்ல பரம்பொருள் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்" என்றார்.

"நாங்கள் முன்னேறி விட்டோம். ஆசான் நந்தீசரை, ஆசான் அகத்தீசரை பூஜை செய்தோம், வெற்றி பெற்றிருக்கிறோம். ஆகவே, நீங்களும் என்னை அழைத்துப்பாருங்கள். நானும் ஆசான் நந்தீசரும் ஒன்று. ஆசான் நந்தீசர் வேறு, நாங்கள் வேறு அல்ல. நாங்கள் எல்லோரும் ஒன்றுதான். ஆகவே, நீங்கள் என்னை அழைத்துப்பாருங்கள், அருள்செய்வேன் என்றார்.

**பொருள்அல்ல வற்றைப் பொருள்என்று உணரும்**
**மருளான்ஆம் மாணாப் பிறப்பு.**

**– திருக்குறள் – மெய் உணர்தல் – குறள் எண் 351.**

**நில்லாத வற்றை நிலையின என்றுஉணரும்**
**புல்லறி வாண்மை கடை.**

**– திருக்குறள் – நிலையாமை – குறள் எண் 331.**

**நில்லாத வற்றை நிலையின என்றுஉணரும்** அறிவுதான் புல்லறிவு என்பார். ஆசானை அழைத்து, நிலையான ஒன்றை கேட்க வேண்டும்.

இனி பிறவாதிருப்பது நிலையானது. பிறந்து வளர்ந்து இறப்பது நிலையானது அல்ல. பிறவாத தன்மை ஒன்றை அடைய வேண்டும். அதற்கு இந்த உடம்புதான் துணையாக இருக்கும். இதை நீக்க முடியாது.

இந்த உடம்பைக் கொண்டுதான் அந்த உடம்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற அறிவை பெற்றாலே, அவன் ஆசி பெற்றவன் என்று அர்த்தம்.

இந்த உடம்பை விட்டு விடாதே. இதன் துணை கொண்டுதான் அதை வெற்றிபெற வேண்டும். இதன் துணையில்லாமல், அந்த உடம்பைக் காப்பாற்ற முடியாது. இதுபோன்ற அறிவை தருபவர் ஒன்று, ஆசான் அகத்தீசராக இருக்க வேண்டும், மகான் திருமூலதேவராக இருக்க வேண்டும். ஆசான் திருமூலதேவர் சொல்வார்,

**நினைக்கின் நினைக்கு நினைப்பவர் தம்மைச்**
**சுனைக்குள் விளைமலர்ச் சோதியி னானைத்**
**தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனுங்**
**கனத்த மனத்தடைந் தாலுயர்ந் தாரே.**

**– திருமந்திரம் – ஞானகுரு தரிசனம் – கவி எண் 2667**

**தினைப்பிளந் தன்ன** – உன்னுடைய ஆன்மீக அறிவு, கல்வி, கேள்வி, அறிவு, திறமை ஒரு கடுகத்தனைதான் இருந்தாலும் சரி, அல்லது சிறிய அளவாக இருந்தாலும் சரி அல்லது தினைப் பிளந்தன்ன, சிற்றறிவுள்ள மனிதனாக நீ இருந்தாலும் சரி, அந்த அறிவு உனக்குப் போதும்.

என்னை நம்பு என்றார்.

என்னை நம்பு நிச்சயம் உன்னை நான் காப்பாற்றுவேன்.

என்னை நம்பு உனக்கு சிறப்பறிவை தருவேன்.

என்னை நம்பு முன் செய்த பாவத்தை பொடியாக்குவேன்,

என்னை நம்பு மரணமிலாப் பெருவாழ்வை தருவேன்.

ஆக **தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனும் –** ஒரு கடுகளவு சிறியதாக அறிவு இருந்தாலும், சிறிய மனிதனாக இருந்தாலும் சரி, கல்வி, கேள்வி, அறிவு, திறமையில் சிறிய அளவாக இருந்தாலும் அந்த அறிவு உனக்கு போதும்.

என் திருவடியைப் பற்றினால், அத்தனை பெருமை உண்டாகும் என்கிறார் ஆசான் திருமூலதேவர். ஆக அத்தனை ஞானிகளும் வல்லமை உள்ளவர்கள். அத்தனை பேரும் வாசி வசப்பட்ட மக்கள். அத்தனை பேரும் தோசி உடம்பை நீக்கியவர்கள்.

**நற்பூச்சந் தனவத்தர் பூசி – மிக**
**நன்றாக வைத்தாலும் நாற்றமே வீசி**
**எப்போதும் கொடுமைசெய் தோசி – என்றே**
**இவ்வுடல் வாழ்வுக ளியாவையும் வீசி.**

**– மகான் மஸ்தான்சாகிபு – ஆனந்தக் களிப்பு – கவி எண் 5.**

இரக்கத் துணிந்து விட்டேன் என்றார். இவ்வுடல் வாழ்வு யாவையும் வீசி என்றார். இப்படி சொல்வதால் அவர் எப்பேர்ப்பட்ட ஆசானாக இருப்பார். **இவ்வுடல் வாழ்வு –** இந்த உலக வாழ்வு, **யாவையும் வீசி** என்றார். இதை மகான் மஸ்தான் சொன்னார்.

ஆக அத்தனை பேரும் இவ்வளவு வல்லமை உள்ளவர்கள். **தினைப்பிளந் தன்ன சிறுமைய ரேனும் –** தினையளவு சிறிய அளவாக இருந்தாலும் சரி, **கனத்த மனத்தடைந் தாலுயர்ந் தாரே** என்றார். உனது திருவடியைத் தவிர, வேறு கதி இல்லை என்று எண்ணுகின்ற அறிவு, அந்த அறிவுதான் உறுதி மிக்க மனம். உன்னைத் தவிர என்னை ரட்சிக்க யாருமில்லை என்று எண்ணுகின்ற அறிவுதான் உறுதி மிக்க மனம். அதுதான் உறுதி. அந்த உறுதி, எப்போது வரவேண்டும்? இறுதியில் வந்து என்ன செய்ய? உறுதி தக்க காலத்தில் வர வேண்டுமல்லவா?

**காலங் கழிந்து காயம் நெகிழ்ந்து காற்றுமழிந்**
**தோலுந் துருத்தியும் நாடி நரம்புந் துவண்டபின்பு**
**சாலவுங் கற்பஞ் சாராது சார்ந்துஞ் சற்றில்லைகாண்**
**வாலிப மெய்திடுங் காலத்தில் கற்பம் வசப்படுமே.**

**– ஞானவெட்டியான் – கவி எண் 1589.**

இளமை காலத்தில் தக்க ஆசானை தேடிக்கொள்ள வேண்டும். தக்க ஆசான், நான் இப்போது சொல்கிறேன். நானே தக்க ஆசான். என்னைப் பிடித்துக் கொள்ளுங்கள். என்னுடைய கருத்துகளை கேட்டுக்கொள்ளுங்கள். அதைப் பின்பற்றி நடந்து பாருங்கள், வாழ்க்கையில் வெற்றி பெறுவீர்கள். ஆக, கனத்த மனம் இதுதான். இதை வாழ்க்கையில் பெற வேண்டும்.

ஆகவே, அன்பர்கள் திருவடியைப் பிடித்து கரையேற வேண்டும். கனத்த மனமும் அதுதான். நாம் காட்டுகின்ற பாதை தெளிந்தபாதை, தெளிவான பாதை. இந்த காலகட்டம் தவறினால், வேறு எந்த காலத்திலும் இப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்காது. இப்படி பேசுவதை தற்பெருமையாக நினைக்க வேண்டாம், உண்மையைப் பேசுகிறோம். பொருளாதாரத்திற்காக இப்படி பேசவில்லை. உண்மையை பிடித்து கரையேறிக்கொள்ள வேண்டும். ஜென்மத்தைக் கடைத்தேற்றுவதற்கு நாங்கள் காட்டுகின்ற பாதை தெளிந்த பாதையாக இருப்பதினாலே நீங்கள் பிடித்து கரையேறிக் கொள்ள வேண்டும். வருகின்ற சித்ரா பௌர்ணமிக்கு ஒரு நாள் நிகழ்ச்சிதான் என்று சொல்லிவிட்டார் ஆசான். சென்ற தீட்சை விழா போன்று ஒரே நாள்தான் நிகழ்ச்சி.

ஆகவே, நமது ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம், ஓங்காரக்குடிலாசான் மேற்கொள்ளும் அறப்பணிகளுக்கு தொண்டு செய்து, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக்கொள்ள வேண்டும். இதைத்தவிர வேறு வழியில்லை.

இங்கே இழப்பதற்கு ஒன்றுமில்லை, பெறுவதற்கு நிறைய உண்டு. ஆனால், தொடர்ந்து வர முடியுமா? என்பதுதான் உங்களுடைய வினைப்பயன்.

இங்கு நடப்பதெல்லாம் சுத்த ஆன்மீகம், சுத்த அறப்பணி. அந்த அறப்பணிக்கு வந்து மதிய நேரத்தில் அல்லது நேரம் கிடைக்கும்போது வந்து தொண்டு செய்ய வேண்டும். ஆசான் ஞானபண்டிதர், ஆசான் திருமூலதேவர், ஆசான் புஜண்டமகரிஷி, ஆசான் போகமகாரிஷி போன்ற ஞானிகள் நடமாடுகின்ற இடம்.

அந்த நேரத்தில் பிள்ளைகளெல்லாம் சாப்பிடுவதை காண்கின்ற நேரம் அது. பெரியோர்கள் வந்து அந்த இடத்தில் இருப்பார்கள். அந்த நேரத்தில் உலக மக்கள் வந்து பசியாறும்போது, நீங்கள் தொண்டு செய்ய வேண்டும். அப்படி தொண்டு செய்யும்போது ஞானிகள் உங்களை பார்க்கின்றார்கள். ஞானிகள் பார்வை உங்கள் மீது படுகிறது. அதன் மூலமாக பாவ விமோசனம் ஏற்படும். அதுபோன்ற வாய்ப்பைப் பயன்படுத்தி, தொண்டு செய்து, ஞானிகள் ஆசியை பெற்றுக் கொள்ள வேண்டும். தொண்டு செய்தால் கண்டு கொள்ளும் சித்தனைத்தும் என்றார்.

தொண்டு செய்தால் ஞானிகள் பார்க்கிறார்கள். ஏனென்றால், இவர்கள், மேற்கொள்ளும் காரியம் தடைபடாது. என்ன காரணம்? நாமெல்லாம் தலைவன் சன்னிதானத்தில் இருக்கிறோம். ஆக, நாம் மேற்கொள்ளும் எந்த செயல்களும் தடைபடாது, தடையே வராது!

ஆகவே இந்த காலக்கட்டத்தில் இதுபோன்ற அறப்பணிகளுக்கு தொண்டு செய்து, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளலாம். சில சந்தர்ப்பத்தில் மனம் சோர்வடைந்தால், இங்கே என்னிடம் வரலாம். இங்கே வந்து, “ஐயா! நிலைமை சரியில்லை என்று சொன்னால் நாங்கள் அதைப் போக்க ஏற்பாடு செய்வோம். நாங்களும் தினம் பூஜை செய்கிறோம். சும்மா ஏதோ என்று நினைக்காதீர்கள்.

நாங்கள் அரைமணி நேரம் கபத்தை அறுப்பதற்காக, நிஷ்டை மேற்கொள்வோம். தலைவன் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார். இப்போது நம் சங்கத்திற்கு ஒரு நாள் இங்கே வந்துவிட்டுப் போனால் போதும். அந்த நிழல் பட்டாலே போதும். ஒவ்வொருவரும் பாவத்திலிருந்து விடுபடலாம். பாவம் நீங்காமல் அறியாமை தெளிவடையாது. அறியாமை நீங்காமல் செல்வம் பெருகாது. அது எந்த செல்வம்? அறிவுச் செல்வம்.

ஆகவே, வருகின்ற இந்த காலக்கட்டத்தில் ஓங்காரக்குடிலை சுற்றி வந்தாலே போதும். தொண்டு செய்ய வாய்ப்பு கிடைத்தால் அதைவிட பெரிய

பாக்கியம். ஆகவே, அன்பர்களுக்கு நல்லகாலம் வந்துவிட்டது. அதற்குரிய நேரமும் சூழ்நிலையும் அமைந்து விட்டது. ஏனென்றால் நான் பேசும்போதே ஆசான் என்னை உற்று நோக்கிக்கொண்டிருக்கிறார். என்ன பேச வேண்டுமென்று முன்னமே தெரியும் ஆசானுக்கு. இன்றைய தேதி **08.11.1998** கிழமை ஞாயிற்றுக்கிழமை. இந்த தேதியில் என்ன பேச வேண்டுமென்பது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஆசானுக்குத் தெரியும். அதற்குத்தான் என்னை அனுப்பியிருக்கிறார். பெரியோர் பெருமையை பேசு, பெரியோர் பெருமையை பேச பேச உலகமக்கள் உண்மைப்பொருளை அறிந்து கொள்ளட்டும். பேசு! பேசு! என்று சொல்வார்கள். சில சமயத்தில் நிறுத்து! நிறுத்து! என்று சொல்வார்கள். அதுவும் நடக்கும், இதுவும் நடக்கும். அப்படி பேசிக்கொண்டே இருப்போம். இதற்கு மேல் பேசாதே என்று சொல்வார்கள்.

ஆகவே, பேசிய இந்த கருத்துகளெல்லாம் லகுவாக, எல்லோரும் கடைப்பிடிக்கக் கூடியதாக இருக்கும், கடினமாக இருக்காது. பழனி, திருப்பதிக்கு நாமும் போவோம், திருச்செந்தூர் போயிருக்கிறோம், சுவாமிமலை போய் இருக்கிறோம். ஆனால் நடந்து போக மாட்டோம். நம் அன்பர்கள் நடந்து செல்ல வேண்டிய அவசியமில்லை. அப்படியெல்லாம் கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லை.

மொட்டையடிப்பதோ, அலகு குத்திக்கொள்வதோ, அங்கம் புரளுவதோ, இதெல்லாம் நமக்கு அவசியமில்லை. மலையேற வேண்டிய அவசியமில்லை. அப்படி ஏதேதோ செய்து கொண்டிருக்கிறான். அவன் மேல் குற்றமில்லை. அது அவன் செய்த வினை.

"ஓம் அகத்தீஸ்வரா! என்னைக் காப்பாற்று!" என்று சொல்கின்ற அந்த சொல், வேண்டுகோளில் இருக்கக்கூடிய லாபம் அவனுக்குத் தெரியாது. அவன் என்ன சொன்னாலும் கேட்க மாட்டான். கூடை கூடையாக மலர் கொட்டுவான், குடம் குடமாக பால் ஊற்றுவான், அதைப்பற்றி நமக்கு அவசியமில்லை, அதைப் பற்றி சிந்திக்கத் தேவை இல்லை. அது அவனுடைய வினைப்பயன். என்ன சொன்னாலும் கேட்கமாட்டான்.

பல ஆண்டுகள், இப்படி தொண்டு செய்து கொண்டே வந்தால்தான் அது புலப்படும். இதெல்லாம் தேவையில்லை போலிருக்கிறது. நாமத்தைச் சொன்னால் நன்மை நடக்கும் என்ற எண்ணம் பிறகு வரும் என்றார். அன்பர்கள் நாங்கள் சொல்கின்ற கருத்தை பின்பற்ற வேண்டும், உங்களுக்கு வாசி வசப்பட வேண்டும், ஆன்மா லயப்பட வேண்டும், ஜென்மத்தைக் கடைத்தேற்ற வேண்டும். இதற்கு ஒரே உபாயம் ஞானிகள் திருவடிதான் என்று சொல்லி முடிக்கிறேன் வணக்கம்.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

# மாசி மாத பௌர்ணமி பூஜை

நாள் : **மன்மத ஆண்டு, மாசி மாதம் 10ஆம் தேதி, 22.02.2016 - திங்கட்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சி உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

# பங்குனி மாத பௌர்ணமி பூஜை

நாள் : **மன்மத ஆண்டு, பங்குனி மாதம் 10ஆம் தேதி, 23.03.2016 - புதன்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** **நிகழ்ச்சி நிரல்** **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**

காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**

காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**

காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**

பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

## அன்பர்களின் அனுபவங்கள்

**பெதப்பம்பட்டி, டி.வீரக்குமார் அவர்களின் அனுபவங்கள்...**

அன்புள்ள ஞானத்திருவடி வாசகர்களுக்கு வணக்கம்.

எனக்கு திருமணமாகி ஒரு ஆண் குழந்தை உள்ளது. நான் பி.காம் பட்டதாரி. எனக்கு நல்ல உத்தியோகம் அமையாமல் இருந்தது. அப்போது பெதப்பம்பட்டி அரசு மருத்துவமனை மருந்தாளுநர் பிரபாகரன் அவர்கள் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எனக்கு கொடுத்து தினந்தோறும் அதில் உள்ள ஞானிகளின் நாமங்களை சொல்லி இருவேளை பூஜை செய்ய சொன்னார். கடந்த ஒரு வருடமாக அவர் சொன்னது போல பூஜை செய்து வந்தேன். நல்ல சம்பளத்தில் உத்தியோகம் அமைந்துள்ளது. குழந்தைகள் நல்லபடியாக இருக்கின்றனர். முன்பு என்னிடம் தீய குணங்கள், கவலை, பயம் இருந்தது. சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்ததற்கு பின்பு மாறிவிட்டது. துறையூருக்கு சென்று ஓங்காரக்குடிலாசானை தரிசித்த பிறகு என்னுடைய மனக்கவலைகள் நீங்கிவிட்டது. மனதில் தைரியமும் பக்தியும் வந்தது.

ஞானத்திருவடி வாசகர்கள் ஓங்காரக்குடிலாசானை தரிசித்து, தொடர்ந்து சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்து, மாதம் ஒருவருக்கு அன்னதானம் செய்து ஓங்காரக்குடிலாசானின் உபதேசத்தை பின்பற்றி ஞானிகளின் ஆசி பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

– டி.வீரக்குமார், பெதப்பம்பட்டி.

**மன்மத ஆண்டில் மனிதர்கள் ஆட்சியை**
**சண்முகன் தகர்ப்பான் சத்திய வாக்கே!**

– முருகப்பெருமான் வாக்கு 09.10.2015

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற தொடர்புக்கு

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

ஓங்காரக்குடில், 113 நகர் விரிவாக்கம், துறையூர் - 621 010.
திருச்சி Dt. செல் : 90950 33311, மின்னஞ்சல் : kudilbooks@gmail.com

தொடர் . . .

திருச்சி மாவட்டம், துறையூர்,

ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகாதேசிக சுவாமிகள்** அவர்கள்

# மகான் ஔவையாரின் ஆத்திசூடிக்கு அருளிய அருளுரை

## 59. துன்பத்திற் கிடங் கொடேல்

எல்லா ஜீவன்களும் தோன்றும்போதே அவையவை, அவையவைகளுக்கு விதிக்கப்பட்ட விதியின் வழியிலே சென்று இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்து வாழ்ந்து இறக்கின்றன. அவை மீண்டும் பிறந்து வாழ்ந்து இறக்கின்றது.

இவ்விதம் நடைபெறும் இயற்கையின் சுழற்சியிலே ஐந்தறிவு ஜீவர்கள் வரை தமக்கு என்ன நடக்கிறது என்பதை அறியாமல் இன்ப துன்பத்தை நுகர்ந்து சாகிறது. ஆனால் ஆறறிவு உள்ள மனிதனுக்கு மட்டுமே, தனக்கு வருகின்ற இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரணம் என்ன என்பதை அறிகின்ற வாய்ப்பைப் பெற்றுள்ளதோடு தாம் படுகின்ற துன்பங்களிலிருந்து விடுபடவும் வாய்ப்புள்ளதையும் அறிந்து, துன்பத்தினை போக்கி இன்பமயமான வாழ்வை வாழ வாய்ப்புள்ளது.

எல்லாம்வல்ல இயற்கை ஜீவர்களைப் படைக்கும்போதே எல்லா ஜீவர்களுக்கும் பொதுவாகவும், என்றும் மாற்ற இயலாததும், நீக்க முடியாததும், விடுபட முடியாததுமாய் பிறவித் துன்பத்தை வைத்து ஒவ்வொரு உயிரையும் படைத்து, காத்து பின் அழிக்கின்றது.

ஆகையினாலே நீக்கமுடியாத பெருந்துன்பம் என்று, ஒன்று உண்டென்றால் அது பிறவித்துன்பமேயாகும்.

மனிதனுக்கு உண்டாகின்ற துன்பங்களை இரண்டு வகையாக பிரிக்கலாம்.

1. இயற்கையாக வருகின்ற துன்பம்,

2 செயற்கையாக வருகின்ற துன்பம்.

1. இயற்கையாக வருகின்ற துன்பமானது நமது பிறப்பிலேயே நம்மைப் பற்றி தொடர்ந்து வருகின்றதாகும்.

பசி, காமம், முதுமை என்ற நீக்கமுடியாத பெருந்துன்பங்களையும் மிகுதி கோபம், பொறாமை, பேராசை, கடுஞ்சொற்கள் என்கிற ஆன்மாவைப் பற்றித் தொடர்ந்து வந்து அவரவர் கர்மவினைகளுக்கு ஏற்ப வெளிப்படுகின்ற துன்பங்களுமாம்.

2. செயற்கை துன்பங்கள் –

விபத்து, விஷஜந்துக்களால் பாதிக்கப்படுதல், இயற்கையினால் பாதிக்கப்படுதல், நோயால் துன்பப்படுதல், வறுமையால் துன்பப்படுதல் என

இப்படி புறகாரணிகளின் தாக்கத்தால் நமக்கு ஏற்படுகின்ற துன்பங்கள் அனைத்தும் செயற்கையான துன்பங்களாகும்.

சரி, இயற்கையான துன்பங்களை வெல்ல முடியாதா? செயற்கையான துன்பங்களை வெல்ல முடியாதா? எனில் வெல்லலாம்.

இயற்கையாக வருகின்ற பிறவித்துன்பத்தினை மாற்றி மரணமிலாப் பெருவாழ்வை பெற்றால், பிறவித் துன்பத்திலிருந்து விடுபடலாம். பிறவித் துன்பத்திலிருந்து விடுபட்டாலன்றி துன்பமிலாத வாழ்வை ஒரு போதும் வாழ முடியாது. அது இன்பமயமான பேரின்ப வாழ்வாகும். மற்றைய அனைத்தும் துன்பத்திற்கு உள்ளாகின்ற வாழ்வாகும். ஆதலினாலேதான் மகான் ஔவை சூட்சுமமாக பிறவிக்கு காரணமான, பிறவித் துன்பத்திற்கு காரணமான எதையும், செய்து விடாதே என எச்சரிக்கிறார்.

